விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ═══ Valampurii ═══

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 30 திங்கட்கிழமை (13.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 176

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# கொடு என்கிறது இந்தியா

# முடியாது என்கிறார் மகிந்த

## இராஜதந்திர மோதல் உருவாகும் ஆபத்து

(கொழும்பு)

13-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட மூலத்திற்கு அமைவாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இந்தியா கொடுத்துவரும் அழுத்தத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிய மறுத்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆபத்திலிருந்து எங்களை மீட்டுவிடுங்கள்

## ரஷ்யாவிடம் ஜனாதிபதி மகிந்த கேட்பார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுவரும் முக்கிய விவகாரங்கள் தொடர்பாக ரஷ்ய தலைவர்களுக்கு விளக்கிக் கூற திட்டமிட்டுள்ள அவர், இந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபட உதவுமாறும் ரஷ்யாவிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது மகிந்த ராஜபக்ஷவிற்கும் ரஷ்ய அதிபர் டிமிற்றி மெட்வெடோவுக்கும் இடையில் உதவியாளர்கள் இல்லாத தனியான சந்திப்பு ஒன்றும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியான பின்னர் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்ததற்காக அவர் ரஷ்யாவிற்கு நன்றி தெரிவிக்கப் போவதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை மீது போர்க்குற்றம் சுமத்தி வெளியாகியுள்ள ஐ.நாவின் அறிக்கை தொடர்பாகவும் அதை அடுத்து எழுந்துள்ள நிலைமைகள் தொடர்பாகவும் ரஷ்ய அதிபர் டிமிற்றி மெட்வெடோவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அத்துடன் இந்த விவகாரம் தொடர்பாக எந்தவொரு அனைத்துலக அமைப்பிலாவது பிரச்சினை எழுப்பப் (20ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் மின்சாரம் தாக்கி

## சுகாதாரப் பரிசோதகர் பலி

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த பொது சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் கொக்குவிலில் இடம்பெற்ற இப் பரிதாப சம்பவத்தில் கொக்குவில் மேற்கை வதிவிடமாகக் கொண்டவரும் வவுனியா பொது வைத்தியசாலையின் உள மருத்துவப் பிரிவின் பொது சுகாதாரப் பரிசோதகருமான வைரமுத்து தயாமோகன் (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை குளித்துவிட்டு வீட்டிற்குள் சென்ற தயாமோகன் வீட்டில் தனது பிள்ளைகள் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்ப (20ஆம் பக்கம் பார்க்க)

## வற்றாப்பளையில்


## இன்று பொங்கல்

(முல்லைத்தீவு)

பிரசித்தி பெற்ற வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் பொங்கல் விழா இன்று நடைபெறவுள்ளது. மிகத் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகின்ற குறித்த ஆலயத்தின் பொங்கல் நிகழ்விற்காக பல இலட்சம் பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உப்பு நீரில் விளக்கு எரியும் அதிசயம் வாய்ந்த வற்றாப்பளை அம்மன் வன்னி மக்களின் காவல் தெய்வமாகப் போற்றப்பட்டு வருகின்றார்.

முல்லைத்தீவு (20ஆம் பக்கம் பார்க்க)



## பொலிஸ் உத்தியோகஸ்தரின் சடலம்

## உமையாள்புரத்தில் மீட்பு

### அடி காயங்கள் காணப்படுவதாகத் தகவல்

(கிளிநொச்சி)

பரந்தன் உமையாள்புரத்தில் நேற்றுக் காலை அடி காயங்களுடன் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஆனந்த சமரக்கோன் (வயது-41) என்ற பொலிஸ் உத்தியோகஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப பொலிஸ் உத்தியோகஸ்தரின் சடலத்தில் அடி காயங்கள் காணப்பட்டதாக கிளிநொச்சிப் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ந-5)

## இலங்கை விவகாரம் மன்மோகனுடன் ஜெயா பேசுவார்

(சென்னை)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை தமிழக முதல்வரும் அதிமுக தலைவியுமான ஜெயலலிதா சந்திக்கவுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் விவகாரம் மற்றும் தமிழகத்தில் தான் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அவர் இந்தியப் பிரதமருடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சர்வதேச வலைப்பின்னலை

## அழிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது



### அமைச்சர் ஹெகலிய கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் சர்வதேச வலைப்பின்னலை அழிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் வலுவான முறையில் மேற்கொள்வதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டுவிட்டாலும் சர்வதேச மட்டத்தில் அவர்களின் அமைப்பு இன்னும் பலமான வலைப்பின்னலுடன் இயங்கி வருவதாகவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர் மேஜர் ஜெனரல் (20ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## ஆங்கில கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் மேலதிக விபரங்களை அறிவித்தல் பலகையில் பார்வையிட முடியும் எனவும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# கொழும்பு வந்த இந்தியக் குழுவுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது

## பீரிஸுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை

(கொழும்பு)

கொழும்பு வந்த இந்திய அதிகாரிகள் குழு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸை சம்பிரதாய பூர்வமாகவே சந்தித்தது. உண்மையான பேச்சுக்கள் ராஜபக்ஷ சகோதரர்களுடனேயே நடத்தப்பட்டதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், தமிழ்நாடு முதலமைச்சரைச் சந்திக்க புதுடில்லியிலிருந்து சென்னைக்குச் சென்ற சிறப்பு விமானத்திலேயே சிவ்சங்கர் மேனன், நிருபமா ராவ், பிரதீப் குமார் ஆகியோர் கொழும்பு வந்தனர். இந்தியக் குழுவுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் அரசாங்கம் செங்கம்பள வரவேற்பு அளித்திருந்தது.

இந்தக் குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் நீண்ட பேச்சுக்களை நடத்தினர்.

இந்தக் குழுவினர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸுடன் குறுகிய நேரத்தையே செலவிட்டிருந்தனர். அவருடனான பேச்சுக்கள் வெறுமனே சம்பிரதாய பூர்வமான அலங்காரச் சந்திப்பாகவே நடந்தது.

அத்துடன் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடல்களில் முற்றாகவே புறந்தள்ளப்பட்டிருந்தனர். உண்மையான பேச்சுக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரின் சகோதரர் கோத்தபாய ஆகியோருடனேயே இடம்பெற்றன.

மீள்குடியமர்பு, இந்தியாவின் திட்டங்கள், அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து இந்தப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது. (ந-5)

## ஊர்காவற்றுறையில் துப்பாக்கி மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் வீடொன்றிலிருந்து 2 துப்பாக்கிகள் படையினரால் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பலாலி படைத்தலைமையகத்திலிருந்து தெரிவிக்கப்பட்ட தகவலில்,

ஊர்காவற்றுறையில் பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் வீடொன்றில் நேற்றிரவு படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது 2 துப்பாக்கிகள் மீட்கப்பட்டது.

குறித்த வீடு ஊர்காவற்றுறை ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவருடையது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் துப்பாக்கிகள் மீட்கப்பட்ட போது அந்நபர் வீட்டிலிருக்கவில்லை. படையினரால் மீட்கப்பட்ட துப்பாக்கிகள் ஊர்காவற்றுறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பலாலி படைத்தலைமையகத்திலிருந்து ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. (ந-5)

## உயர்தர விடைத்தாள் திருத்தும் பணியை பல்கலை ஆசிரியர்கள் புறக்கணிப்பர்

(கொழும்பு)

2011ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணியிலிருந்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் விலகிக் கொள்வர் என்பதை பரீட்சைகள் ஆணையாளருக்கு இவ்வாரம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியிலிருந்து விலக்கிக்கொள்ளும் உறுதியான தீர்மானத்தை சங்கத்தின் நிறைவேற்றுக்குழு, கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டதாக அச் சங்கத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

அரசாங்க அதிகாரிகளுடன் பல சுற்றுப்பேச்சு வார்த்தைகள் நடைபெற்றபோதிலும் போதுமான சம்பள உயர்வுக் கோரிக்கை தொடர்பாக திருப்திகரமான எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. அதனால் உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைதிருத்துவதிலிருந்துவிலகுவதன்மூலம் எமது தொழிற்சங்க நடவடிக்கையை வலிமையாக்கத் தீர்மானித் தோம் என அவர் கூறினார்.

இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்கவிடம் கேட்டபோது பல்கலைக்கழக ஆசிரியர்கள் மேற்படி தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்வர் என நம்புவதைத் தவிர எதுவும் கூறுவதற்கில்லை எனப் பதிலளித்தார். (ந-5)

## இலங்கை-இந்திய உறவை சீர்குலைக்க சூழ்ச்சி-திவயின்

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள உறவுகளை கெடுப்பதற்கான சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் இந்த தகவல்களின் அடிப்படையில் இதன் பின்னணியில் பிரிவினைவாதத்திற்கு உதவிய வெளிநாட்டு சக்திகளும் புலம்பெயர் தமிழர்களும் இருப்பது தெரியவந்துள்ளதாகவும் திவயின தெரிவித்துள்ளது.

இந்த சக்திகள் தமிழக அரசாங்கத்தின் ஊடாக இந்திய மத்திய அரசாங்கத்திற்கு இலங்கை தொடர்பில் பல்வேறு அழுத்தங்களை கொடுக்க முயற்சித்து வருகின்றன.

இலங்கைக்கு எதிராக பொருளாதார தடைவிதிக்குமாறு தமிழ் நாடு அரசாங்கம் தீர்மானம் நிறைவேற்றியதும் இந்த சக்திகளின் சூழ்ச்சியாக இருக்கலாம்.

எவ்வாறாயினும் இரண்டு நாடுகளும் மிகவும் புரிந்துணர்வுடன் செயற்பட்டுவருவதாக இது குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான பிரதிநிதிகள் இந்திய உயர்மட்ட பிரதிநிதிகளுடன் மிகவும் தொடர்புடன் கூடிய பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த அமைச்சர் கூறியுள்ளதாக திவயின தெரிவித்துள்ளது. (ந-5)







சாவகச்சேரி சிவன்கோயில் வீதியிலுள்ள தென்மராட்சி கலைமன்றக் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் கௌரவிப்பு விழாவுக்கு சாவகச்சேரி வாரி வனம் முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து அவர் அழைத்து வரப்படுவதையும், வாழ்த்துப்பா இசைத்து வழங்கப்படுவதையும், கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் திருத்தம் செய்து தரப்படும்.

06, கனகசபை லேன்
சிவலிங்கப்புளியடி, K.K.S.Road
0212228680, 0775925088
(5148)

**வாழ்த்துகின்றோம்**

சித்தன்கேணி நகரில் பன்னெடுங்காலம் கல்விக்கு அரும்பணியாற்றிய சுப்ரா கல்வி நிறுவனத்தையும், பணிப்பாளர் திரு.ஐங்கரன், ஆசிரியர் சமூகத்தையும் பல்லாண்டு வாழ்ந்து கல்விக்கு அரும்பணியாற்ற இறையருளை யாசித்து வாழ்த்துகின்றேன்.

பா.சுரேந்திரன் குடும்பம்
சித்தன்கேணி.
(சி-3459)

## கொழும்பிலிருந்து வந்த பஸ்ஸில் இரண்டு கிலோக்கிராம் கஞ்சா

### சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றினர்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் ஒன்றிலிருந்து இரண்டு கிலோக்கிராம் கஞ்சா சாவகச்சேரி பொலிஸாரினால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான சேவையில் ஈடுபட்ட தனி யார் பஸ் ஒன்று சாவகச்சேரி பொலிஸாரினால் சோதனைக்குட்படுத்தப்பட்ட போது அதிலிருந்து இரண்டு கிலோக்கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டது. இந்நிலையில் சந்தேகத்தின் பேரில் பஸ் சாரதியையும் நடத்துனரையும் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். (ந-5)

# தமிழக சட்டசபைத் தீர்மானத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்

(கொழும்பு)

இலங்கை மீது இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என கடந்த வாரம் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தமிழினப் படுகொலையை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர்க்குற்றவாளி என்றும் அரசாங்கத்திற்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்றும் தமிழக சட்டப்பேரவை கடந்தவாரம் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. இந்நிலையில் அரசாங்கம் சிறுபான்மைக் கட்சிகளுடன் அதிகாரப் பரவலாக்கம் குறித்து பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் அதைக் குழப்பும் வகையிலேயே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரசின் அரசியல் விவகாரப் பொறுப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரின் அரசாங்கமும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளை குழப்பும் வகையிலும் இந்தத் தீர்மானம் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக தமிழக சட்டசபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களும் கண்டிப்பதாக ஹரிஸ் கூறியுள்ளார்.

இந்திய வர்த்தக நிறுவனங்கள் பல இலங்கையில் முதலிட்டுள்ள நிலையில் இவ்வாறானதொரு தீர்மானத்தின் மூலம் அரசாங்கம் மாத்திரமன்றி இந்திய அரசும் பாதிக்கப்படும்.

எனவே கடந்தகால பகைமை உணர்வுகளை மறந்து நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்று தமிழக சட்டசபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## நோர்வேயுடன் நல்லுறவு முயற்சி

நோர்வேயுடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை இலங்கை அரசு ஆரம்பிக்கவுள்ளது. இதற்காக அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா தலைமையிலான தூதுக் குழு வொன்று ஒஸ்லோவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக த.தே.கூட்டமைப்பிற்கும், அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களில் அரச தரப்பு தூதுக்குழுவிற்கு அமைச்சர் தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# கோத்தபாய பயணிக்க இருந்த உலங்குவானூர்தியில் கோளாறு

## விமானி கண்டறிந்தார் ; காலன் தோற்றான்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்குப் பயணம் செய்யவிருந்த உலங்குவானூர்தியில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருந்தது கடைசி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் பாரிய அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டதாக விமானப்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் கிளிநொச்சி சென்றிருந்தார்.

கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் இவர்கள் பங்கேற்றிருந்தனர்.

தெற்காசியாவில் மிக உயரமான இந்த தொலைத்தொடர்பு கோபுரம் அடிப்படையில் இராணுவ தேவைகளுக்கும் அரச தொலைக்காட்சி, வானொலி சேவைகளை தரம் உயர்த்தவும் பயன்படுத்தப்படவுள்ளது. அதேவேளை எதிர்காலத்தில் இதனை வர்த்தகப் பயன்பாட்டிற்கும் வழங்கும் திட்டம் உள்ளது.

இந்தக் கோபுர திறப்பு விழாவிற்கு ஜனாதிபதியும், கோத்தபாய ராஜபக்ஷவும் புறப்பட முன்பதாக ரணில் விக்கிரமசிங்கவின் தாயார் நளினி விக்கிரமசிங்கவின் மரணச் செய்தி அவர்களுக்கு கிடைத்தது.

மாலையில் இறுதி நிகழ்வுகள் நடைபெறவிருந்ததால் ஜனாதிபதியும் கோத்தபாய ராஜபக்ஷவும் அவசரமாக கொழும்பு திரும்ப முயன்றனர்.

அவர்களை ஏற்றிச்செல்ல முக்கிய பிரமுகர்களுக்கான இரண்டு உலங்குவானூர்திகள் கிளிநொச்சியில் காத்திருந்தன.

அவற்றில் ஒன்றில் மகிந்த ராஜபக்ஷ கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றார். அவர் மாலை 5 மணியளவில் கொழும்பு திரும்பி நளினி விக்கிரமசிங்கவின் உடலுக்கு இறுதி வணக்கம் செலுத்தினார். ஆனால் கோத்தபாய ராஜபக்ஷ வரவில்லை.

அவரும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்கவும் பயணம் செய்வதற்காக உலங்குவானூர்தியில் ஏறி அமர்ந்த நிலையில் அதில் கோளாறு ஏற்பட்டிருப்பதை விமானி கடைசி நேரத்தில் கண்டுபிடித்தார்.

இதனால் அதில் பயணம் மேற்கொள்வது ஆபத்தானது என்று விமானி கூறியதால் வேறொரு நிரந்தர இறக்கை விமானம் மூலம் கோத்தபாய ராஜபக்ஷ கொழும்பு திரும்ப நேரிட்டது.

உலங்குவானூர்தியில் ஏற்பட்டுள்ள கோளாறு கடைசிநேரத்தில் கண்டுபிடிக்கப்படாது போயிருந்தால் நடுவானில் பாரிய விபத்து ஒன்றை சந்திக்க வேண்டியிருந்திருக்கும் என்று விமானப்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ந-5)

# மரண அறிவித்தல்



## திருமதி ஆறுமுகம் - பூமணி

அல்லியவத்தை,கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமும் வதிவிடமுமாகக் கொண்ட திருமதி ஆறுமுகம் -பூமணி 08.06.2011 (புதன்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி -தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், சி.ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வல்லி-இரத்தினம் அவர்களின் பாசமிகு சகோதரியும், ஆறுமுகம் தம்பித்துரை, ஆறுமுகம் தவராசா, ஆறுமுகம் நடராசா, ஆறுமுகம் உதயராசா (ஜேர்மன்), ஆறுமுகம் ஆனந்தராசா (பிரான்ஸ்), ஆறுமுகம் அற்புதராசா (சுவிஸ்) மற்றும் தங்கராசா-ரதீஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், த.கலாநிதி, ந.ராணி, உ.கௌரி, ஆ.துசி, அ.அனுலாஜினி மற்றும் ச.தங்கராசா ஆகியோரின் மாமியும், த.நிதர்சா, த.லக்ஷன், த.நிலக்ஷன், சிவகுமரன் -லோஜினி, ந.நதீஸ்வரன், ந.ஜசிந்தன், உ.அஸ்வினி(ஜேர்மன்) உ.அஜிந்தா(ஜேர்மன்), உ.அஜிந்தன்(ஜேர்மன்), ஆ.அனுசன்(பிரான்ஸ்), ஆ.அனுஸ்ரியா (பிரான்ஸ்), அ.அஜிதன் (சுவிஸ்), அ.அட்ஷயா(சுவிஸ்), த.தனுஷாந், த.அனுஷாந், த.தனுஸ்ரன் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், மற்றும் சி.அஷ்வின், சி.அலக்ஸ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 13.06.2011 (திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**அல்லியவத்தை**
**கோப்பாய் மத்தி, கோப்பாய்.**

தகவல்: ஆ.உதயராசா குடும்பம் *(ஜேர்மன்)*
ஆ.ஆனந்தராசா குடும்பம் *(பிரான்ஸ்)*
ஆ.அற்புதராசா குடும்பம் *(சுவிஸ்)*

(C-3460)

# திறந்த பல்கலைக் கழகத்தில் தொழில்நுட்பவியல் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் தொழில்நுட்ப பீடத்தினால்நடத்தப்படும் அடிப்படைக் கற்கைநெறி, டிப்ளோமாக் கற்கைநெறி, இளமாணிப்பட்டக் கற்கை நெறி ஆகியவற்றுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் டபிள்யூ.ஏ.விமலவீர தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும்,

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரீன், ஈபிடிபியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கே. கமலேந்திரன் மற்றும் நல்லூர் அமைப்பாளர் ஏ.ரவீந்திரதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ந)

# பாம்புக்கடிக்கு இலக்கான முதியவர் சிகிச்சை பலனின்றி பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வந்த முதியவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 3 ஆம் திகதி 6.30 மணியளவில் மானிப்பாய் சோதி வேம்படியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் கணபதிப்பிள்ளை மாகாலிங்கம் (வயது 60)என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவாதாவது, தனது வீட்டிற்கு அருகிலுள்ள தோட்டக்காணியில் கட்டி வைத்திருந்த ஆட்டினை வீட்டிற்குக் கொண்டுவருவதற்காக சென்ற போதே இவரை பாம்பு கடித்துள்ளது.

இச்சம்பவத்தையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 9 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த இவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ஸ்ரீ-6)

## யாழ்.செய்திகள்

### நாடகமும் அரங்கியலும் புதிய பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினரால் நடத்தப்படும் நாடகமும் அரங்கியலும் புதிய பயிற்சிநெறி நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தியானம், யோகாசனம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பயிற்சிநெறிகளில் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் உடன் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (ஸ்ரீ)

### புதிய நிர்வாக சபை தெரிவு

(தனங்கிளப்பு)

மறவன்புலோ கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கைதடி கமநல சேவையின் பெரும்போக உத்தியோகத்தர் க.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக சி.திருஞானசம் பந்தர், செயலாளராக க.குணாநந்தன், பொருளாளராக சி.சிவகுமார், உபதலை வராக ரி.கிருஸ்ணமூர்த்தி ,உ்பசெயலா ளராக கருணாநிதி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

❖ ❖ ❖ ❖ ❖

(தனங்கிளப்பு)

மறவன்புலோ மாதர்சங்க நிர்வாகத் தெரிவு கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை கிராமசேவகர் அலுவலகத்தில் கிராம சேவகர் ஆ.நடராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக சி.சுப்புலக்ஷ்மி, செயலாளராக த.அருள்செல்வி, பொருளாளராக இ.சுபாசினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-37)

# யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படல் வேண்டும்

## நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மக்கள் நிலத்தடி நீரை மட்டுமே நம்பியுள்ளனர்.யாழ்.மாவட்டத்தின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்ய எம்மிடமுள்ள ஒரேஒரு மூலம் நிலத்தடி நீர் மட்டுமே. மாசடைந்து வரும் நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும் என யாழ்.மாவட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் பா.தவேந்திரகுமார் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலத்தடி நீரானது மாசடைவதற்கு சனத்தொகை அதிகரிப்பு, அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவையே முக்கிய காரணங்களாக உள்ளன.

யாழ்.மாவட்ட நகர்ப்புறங்களில் வீடுகள் நெருக்கமாக அமைந்திருப்பதால் மலசல கூடங்கள், கிணறுகள் என்பன அருகருகே அமைந்து காணப்படுகிறது. இதனால் கிணற்று நீரானது மாசுபடக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே, இவ்விடயத்தில் சுகாதாரசேவை அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும்.

அத்தோடு நிலத்தடி நீரைப் பயன்படுத்தி பெருமளவு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விவசாய நடவடிக்கைகளின் போது விவசாயிகள் கட்டுப்பாடின்றி உரங்களையும் இரசாயனப் பொருட்களையும் உபயோகிப்பதனால் நிலத்தடி நீர் மாசடைகின்றது. நிலத்தடி நீரை அருந்தும் குழந்தைகள் இந்நீரை அருந்துவதால் நோய்வாய்ப்படும் அவல நிலையும் உள்ளது.

மேலும் இந்நிலத்தடி நீரைப் பாதுகாப்பதில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். பாதுகாப்பு நடவடிக்கைகள் ,இல்லாத தொழிற்சாலைகளை இனங்காணும் போது மக்கள் அது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும். இவ்விடயம் தொடர்பாக சுகாதார உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன் முதற்கட்டமாக யாழ்.மாவட்டம் முழுவதும் உள்ள கிணறுகள் பரிசோதிக்கப்படவுள்ளன. இச்செயற்பாடானது தொடர்ந்து நடைபெறும் எனவும் அவர் கூறினார். (ஸ்ரீ-3)

### பொங்கல் உற்சவம்

(இருபாலை)

யாழ்ப்பாணம் கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த விசாகப் பொங்கல் உற்சவம் இன்று காலை ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை இடம்பெற்று மாலை 5 மணிக்கு விசேட பூசைகள் மற்றும் திருவூஞ்சல் நிகழ்வு நிறைவு பெற்று சுவாமி வீதியுலா வருகின்ற நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

(ஸ்ரீ-136)

# ஆலயத்தினுள் புகுந்து ரூ.10 இலட்சம் பெறுமதியான பொருட்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத்தில் ரூபா 10 இலட்சம் பெறுமதியான பொருட்கள் கடந்த 10 ஆம் திகதி இரவு திருடப்பட்டுள்ளது.

ஆலயக் கூரையினைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் கருவறையிலுள்ள விநாயகரின் சிலையைப் புரட்டி இயந்திரத் தகட்டினை களவாடியதோடு பரிவார மூர்த்தங்களின் உருக்களையும் புரட்டி அதன் கீழ் வைக்கப்பட்டிருந்த இயந்திரத் தகடுகளையும் வெள்ளி கலசங்கள் மற்றும் தங்க நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

அத்துடன் ஆலயத்துக்கருகில் கைவிடப்பட்ட நிலையில் சைக்கிள் ஒன்றும் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் சுன்னாகப் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை மாதகல் பகுதியிலுள்ள வன்னியர் கோயிலில் கடந்த வியாழக்கிழமை பிள்ளையார்சிலை திருடப்பட்டுள்ளது. (ஸ்ரீ)


### பிறவுண்ஸ் கம்பனியால் நீர்த்தாங்கி அமைப்பு

(இருபாலை)

இருபாலை கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பிறவுண்ஸ் கம்பனியின் அனுசரணையுடன் 10 ஆயிரம் லீற்றர் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு வருகின்றது.

இதன்மூலம் 400 குடும்பங்களுக்கு குடிநீர் பெறக்கூடிய வசதி கிட்டியுள்ளது.

இத்திட்டம் பிறவுண்ஸ் கம்பனியின் யாழ். முகவர் க.நிசாகரன் மேற்பார்வையில் இடம்பெற்று வருகிறது. (ஸ்ரீ-136)





மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் பாடசாலைகளுக்கு நடத்தப்பட்டு வரும் "ஒழுங்கான சமுதாயத்தின் வழிகாட்டிகள் மாணவர்களே" என்ற தொடர் கருத்தரங்கின் 8 ஆவது கருத்தரங்கு அண்மையில் பண்டத்தரிப்பு றோ.க.த.க. பாடசாலை மாணவர்களுக்கும் பிரான்பற்று கலைமகள் மகா வித்தியாலய மாணவர்களுக்கும் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் கருத்துரைவழங்குவதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இறுதி யுத்தத்தின்போது கைவிடப்பட்ட பொருட்கள் உரியவர்களிடம் கையளிப்பு

வன்னியில் நடைபெற்ற யுத்தத்தின் போது தமது பொருட்களை கைவிட்டவர்களின் பொருட்கள் அனைத்தும் வவுனியா கச்சேரியில் மக்களின் பார்வைக்காக கடந்த 5 நாட்களாக வைக்கப்பட்டிருந்தது.

இப்பொருட்கள் நேற்று உரிய ஆதாரத்துடன் அரசாங்க அதிபரால் கையொப்பமிடப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் மோட்டார் சைக்கிள், ஆட்டோ என்பனவும் வேறு பல பெறுமதியான பொருட்களுமே ஆதாரங்களைச் சமர்ப்பித்தோருக்கு கையளிக்கப்பட்டது.

இச்செயற்பாட்டில் வவுனியா கச்சேரி ஊழியர்களும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தின்போது பொருட்களை கைவிட்டவர்கள் உரிய ஆதாரம் காட்டி பொருட்களை பெற்றுக்கொள்ளலாம் என வவுனியா அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# அச்சுவேலியில் சதொச விற்பனை நிலையம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி பகுதியில் புதிதாக அமையப் பெற்றுள்ள சதொச விற்பனை நிலையத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் திறந்து வைத்ததுடன் அதன் விற்பனை நடவடிக்கைகளையும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துள்ளார்.

மக்கள் தமக்குத் தேவையான பல்வேறு பொருட்களையும் இலகுவில் பெற்றுக் கொள்ளும் விதமாக நாடளாவிய ரீதியில் மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் சதொச விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன் பிரகாரம் நாடளாவிய ரீதியில் 240 ஆவது சதொச விற்பனை நிலையம் நேற்று முன்தினம் அச்சுவேலியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நாடாவைவெட்டி நிலையத்தை திறந்து வைத்ததுடன் மங்கல விளக்கினையும் ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன் மற்றும் கோப்பாய் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-2)


## இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



ஏழாம் திருவிழா (13.06.2011)

### ஏற்றம் தருவாய் இணுவைக் கந்தா

முக்கண்ணன் குமரன் நீ மூவுலகத்தலைவன் நீ
ஐங்கரனின் இளையவன் நீ ஐயங்கள் தீர்ப்பவன் நீ
திருமாலின் மருகன் நீ திருப்பரங்குன்றம் அமர்ந்தவன் நீ
பிரமாவைக் குட்டியவன் நீ பிரணவப் பொருளை ஓதியவன் நீ
சுட்ட பழம் கொடுத்தவன் நீ சூரனை வதைத்தவன் நீ
அல்லல்கள் அறுப்பவன் நீ அடியவர்களுக்கு அருளுபவன் நீ
இணுவில் அமர்ந்தவன் நீ இன்னல்கள் களைபவன் நீ
எமக்கருள் கொடுப்பாய் நீ என்றும் ஏற்றம் தருவாய் நீயே கந்தா.

ஆக்கம் சொக்கலிங்கம். தர்மகுலசிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர்
நாயன்மார்கட்டு)

(5114)

7 ஆம் திருவிழா உபயகாரர்


# ஐ.நா.மனித உரிமை பேரவையின் அடுத்த அமர்வின்போது சிக்கல்நிலை

## முன்னேற்பாட்டு நடவடிக்கையில் அரசு

(கொழும்பு)

ஐ.நா.உரிமைக்கவுன்சிலின் செப்டெம்பர் மாத அமர்வை இலக்கு வைத்த செயற்பாடுகளை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் மனித உரிமைக் கவுன்சிலின் அமர்வின்போது பெரும்பாலும் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை எடுப்பதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. ஆயினும் செப்டெம்பர் மாத அமர்வில் இலங்கை சவால்களை எதிர்கொள்ள நேரிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை அமர்வின் போது மேற்கொள்ளப்பட்ட இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பரப்புரைகள் சனல் 4 தொலைக்காட்சி சேவையின் விபரண திரைப்படம் , ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை என்பன தொடர் பில் மனித உரிமை கவுன்சில் உறுப்பு நாடு கள் இடையே இலங்கை தொடர்பில் ஓரளவு அதிருப்தியான போக்கு தலை தூக்கியுள்ளது.

அதனை நாடி பிடித்துப் பார்த்துள்ள அரசாங்கம் எதிர்வரும் செப்டெம்பரில் இடம் பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் அமர்வின் போது சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம் என்று எதிர்பார்க்கின்றது.

அதனைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் பாதுகாப்பு அமைச்சு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து தற்போது பிரசார செயற்றிட்டமொன்றை முன்னெடுக்க உத்தேசித்துள்ளது. அதற்கென இலங்கையின் நிலைமைகள் மற்றும் கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள் தொடர்பான அறிக்கையொன்றை இரு அமைச்சுகளும் இணைந்து தயாரித்து வருகின்றன.

அவ்வறிக்கை பூரணப்படுத்தப்பட்ட பின்னர் ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளுக்கும் அமைச்சர்களைக் கொண்ட குழுக்களை அனுப்பி இலங்கைக்கான ஆதரவைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(ஸ்ரீ-2)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி

### மங்கையற்கரசி நமசிவாயம்

(புங்குடுதீவு. 5- கொக்குவில் கிழக்கு)

திதி:- திரயோதசி

மண் மகிழ 11 - 06 - 1927

கண் நெகிழ 14 - 05 - 2011

எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அஞ்சல்கள், தொலைபேசி ஊடாக ஆறுதல்கள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது வீட்டுக்கிருத்தியம் இன்று 13.06.2011 திங்கட்கிழமை மு.ப 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

43/1 சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(5169)

குடும்பத்தினர்.


# மிகப் பாரிய ஹெரோயின் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்க போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் 3 ஆயிரம் ஹெரோயின் பொதிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மிகப்பாரிய போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணிபுரியும் சுத்திகரிப்பாளர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னைக்கும் இலங்கைக்கும் இடையிலான ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலுக்கு இவர்கள் உடந்தையாக செயற்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சுத்திகரிப்பாளர் மூவரும் ஹெறொயின் பொதிகளை தூசி உறிஞ்சி சுத்திகரிப்பு கருவிக்குள் மறைத்து வைத்துள்ளனர்.

இந்தக் கருவிக்குள்ளிருந்தே 3ஆயிரம் ஹெரோயின் பொதிகள் கட்டுநாயக்க போதைப்பொருள் தடுப்புப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

(ஸ்ரீ-2)

## மாணவர்களுக்கு பாதணிகள் அன்பளிப்பு

(இருபாலை)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் இருபாலை சி.சி.த.க. பாடசாலையிலுள்ள வறிய மாணவர்களுக்கு கடந்த மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை பாதணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி கே. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ-136

## இன்று ஒரு தகவல்

# மூன்று நண்பர்கள்

ஒரு ஊரில் ஒரு ஆள் இருந்தான்.

அவன் மீது ஏதோ ஒரு குற்றச்சாட்டு.

அதனால் அரண்மனையிலிருந்து அவனுக்கு 'அழைப்பு' வந்தது.

"உன்னை விசாரிக்க வேண்டியிருக்கிறது... அதனால் அரண்மனை விசாரணை மண்டபத்திற்கு வந்து சேர்!" என்று அரண்மனை ஆணை தெரிவித்தது.

இவன், 'நம்மீது எந்தத் தப்பும் இல்லையே... நாம் எந்தத் தவறும் செய்யவில்லையே! என்று நினைத்தான். இருந்தாலும் அரசாங்க உத்தரவு; அதை அலட்சியம் செய்ய முடியுமா? போய்தான் தீர வேண்டும்.

தனியாகப் போவதற்கு அவனுக்குத் தயக்கமாக இருந்தது.

தன்னுடன் யாராவது துணைக்கு வந்து தனக்காகக் கொஞ்சம் வாதாடினால் பரவாயில்லை என்று அவன் நினைத்தான்...

வக்கீல் மாதிரி ஒருவர் அவனுக்கு அப்போது தேவைப் பட்டார்.

யாரை அழைத்துக்கொண்டு போகலாம்...? என்று அவன் யோசனை.

அவனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தார்கள்.

அதனால் அவர்களில் ஒருவரை அழைத்துக் கொண்டு போகலாம் என்று முடிவு செய்து... ரொம்பவும் நெருக்கமான ஒரு நண்பனின் வீட்டுக்குப் போனான்.

"என்னை விசாரிப்பதற்காக அரண்மனைக்கு வரச் சொல்லி ஆணை வந்திருக்கிறது. நீ கொஞ்சம் எனக்காக அங்கே வந்து வாதாட வேண்டும்! என் சார்பாகப் பேச வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டான்.

"என்னால் வர முடியாது!" என்று அந்த நண்பன் சொல்லி விட்டான்.

'ரொம்பவும் நெருக்கமாக நம்முடன் பழகிக்கொண்டிருந்த இவனே இப்படி சொல்லி விட்டானே...!' என்று நினைத்து நமது ஆள் கொஞ்சம் வருத்தப்பட்டான்.

'சரி, பரவாயில்லை... இன்னொரு நண்பனிடம் போவோம்' என்று நினைத்து இன்னொரு நண்பனிடம் சென்று விபரம் தெரிவித்தான்.

இரண்டாவது நண்பன் என்ன சொன்னான் தெரியுமா?

"வரமுடியாது" என்று சொல்லவில்லை... "வருகிறேன்... ஆனால்... அரண்மனை நுழைவாயில் வரைக்கும்தான் வருவேன். அங்கேயே நின்று விடுவேன்... அதற்கும் மேல் வரமாட்டேன்!" என்று கூறிவிட்டான்.

'அப்படி அதுவரையில் வந்து என்ன பிரயோசனம்? கடைசி வரையில் நம்முடன் வந்து நமக்காக வாதாட வேண்டுமே...' அதுதானே முக்கியம்!" என்று இவன் நினைத்தான்.

பிறகு இவன், சரி என்று சொல்லி, மூன்றாவது நண்பனிடம் போனான்.

அந்த மூன்றாவது நண்பன் இவனுக்கு அதிக நெருக்கமானவன் இல்லை... இருந்தாலும் போனான். விபரத்தைச் சொன்னான்.

அந்த மூன்றாவது நண்பன் என்ன சொன்னான் தெரியுமா?

ஒன்றுமே சொல்லவில்லை... உடனே உதவி செய்வதற்கு, "வா... போகலாம்!" என்று சொல்லி இவனுடன் புறப்பட்டுவிட்டான். கூடவே வந்தான்... கடைசி வரைக்கும் வந்தான். ராஜாவின் முன்னால் நின்றான். இவனுக்காக வாதாடினான். பரிந்து பேசினான். விடுதலையும் வாங்கிக் கொடுத்தான்.

இது ஒரு யூதக்கதை.

இதிலுள்ள உட்கருத்து இதுதான்:

ஒவ்வொரு மனிதனுக்கும் மூன்று நண்பர்கள் உண்டு. முதல் நண்பனுக்கு என்ன பேர் தெரியுமா?- பணம்! இரண்டாவது நண்பன் யார் தெரியுமா?- சொந்தம்! மூன்றாவது நண்பன்- ஒருவன் செய்த நற்செயல்கள்!

கடைசியில்- பணம் கூடவராது. சொந்தம்-கல்லறை வரைக்கும் வரும். நற்செயல்கள்தான் நம் கூடவே வரும்.

மேலும், நமக்குப் பின்னாலும் நம்மைப் பற்றி நாம் செய்த நற்செயல்கள்தான் சொல்லிக்கொண்டே இருக்கும்!

மனிதனாகப் பிறந்தவன் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதுதான் இந்தக் கதையின் நோக்கம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஜனாதிபதி தலைமையில் கொழும்பில் மாபெரும் விவசாய மாநாடு

(கொழும்பு)

35 ஆயிரம் விவசாயிகள் பங்கு பற்றும் மாபெரும் விவசாய மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இது குறித்து அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவிக்கையில், சகல பயிர்களுக்கும் மானிய அடிப்படையில் அரசாங்கம் உரத்தை வழங்குகின்றது. இதன் மூலம் உச்ச கட்ட நன்மைகளை விவசாயிகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50 கிலோ எடை கொண்ட உரப் பொதியை 350 ரூபாவுக்கு அரசாங்கம் விற்பனை செய்கின்றது.

அத்துடன் காய்கறிகள் உட்பட ஏனைய பயிர்ச்செய்கைக்கான 50 கிலோ உரத்தை 1200 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றது. உரத்தை விற்பனை செய்யும் அரசாங்க மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இந்தவிலைகளில் உரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உரமானியம் என்பது நாட்டிற்கான மூலதனமே அன்றி செலவினம் அல்ல. இதனடிப்படையில் அதிகமாக பயிரிட்டு அதிகமாக அறுவடை செய்வதற்கு உந்து சக்தியாக இந்த மாநாடு விளங்குமென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# ஆறுதலின் அறிவுப்பயணம்

(யாழ்ப்பாணம்)

ஆறுதல் நிறுவனத்தினால் ஒவ்வொரு மாதமும் அறிவுப் பயணம் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இதற்கமைய இம்மாத நிகழ்வு நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சிவரூபன் சூழலும் சவால்களும் என்ற விடயம் பற்றிய கருத்துரையை ஆற்றவுள்ளார். (ஸ்ரீ-2)

# வெள்ளிமலை 10 வது இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேச சபை உள்ளூராட்சி மறுசீரமைப்புச் செயற்றிட்டத்தின் கீழ் "வெள்ளி மலை" 10 ஆவது இதழ் வெளியீடு நாளை மாலை 3 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி. சுலோச்சனா முருகநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக முதுபெரும் புலவர் கலா பூஷணம் வை.க.சிற்றம்பலம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்புக் கவியரங்கமும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ)

# மஹாகும்பாபிஷேகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி தட்டுவன் கொட்டி கண்ணகி நகர் அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய மஹா கும்பா பிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.02 மணி முதல் 11.50 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்த முடியும். (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 |
| தக்காளி | 35 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 60 | 80 | 70 |
| கரட் | 60 | 100 | 80 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 20 | 30 | 20 |
| சின்ன வெங்காயம் | 150 | 130 | 130 |
| பெரிய வெங்காயம் | 45 | 70 | 50 |
| பாகற்காய் | 70 | 120 | 70 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | -- |
| பயற்றங்காய் | 80 | 100 | 110 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 |
| பீற்றூட் | -- | 80 | 80 |
| கறிமிளகாய் | 70 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 350 |
| போஞ்சி | -- | 150 | -- |
| கத்தரிதம்புள்ள | 25 | 30 | 30 |
| கீரை - 1 பிடி | 5-8 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 40 |

# இராசி பலன்

*13.06.2011*

*(வைகாசி 30,திங்கட்கிழமை)*

*சூரிய உதயம் காலை 5.55மணிக்கு*

*துவாதசி காலை 7.33 மணிவரை*

*திரயோதசி பின்னிரவு 5.30 மணிவரை*

*விசாகம் பின்னிரவு 3.36 மணி வரை*

*பிரதோச விரதம்.*

**மேடம்** உடல் நலம் சீராகும்,கடன் பிரச்சினைகளைச் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், பொன்னான நாள், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம், இல்லத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலேங்கும், இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், தடைப்பட்ட பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், ஆதரவாளர்களின் எண்ணிக்கை கூடும்.

**கடகம்** தொல்லை கொடுத்த சிலர் உங்கள் பக்கம் திரும்பலாம், மதிப்பும், மரியாதையும் உயரும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம்.

**சிங்கம்** உறவினர் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம்.

**கன்னி** பணியாளர் தொல்லை அகலும், தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை அமையலாம், சுபசெய்திகள் அதிகரிக்கும், தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

**விருச்சிகம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், திடீர் பயணங்களால் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு** தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், இலட்சியப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், அரசியல் செல்வாக்கு கிடைக்கலாம், பயணங்களால் பலனடைவீர்கள், தொழில் விருத்தியுண்டு.

**மகரம்** செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரும், ஆடம்பரப் பொருட்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணிய கருமங்கள் எளிதில் நிறைவேறும்.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்று தொடரலாம், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், தந்தை வழி உறவில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும், தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, அலைச்சல்கள் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், குடும்பத்தில் சிறு சிறு வாக்குவாதங்கள் ஏற்பட்டு மறையும்.

வளவன்

# மற்றவர்களிடம் கடுமையாக வேலைவாங்கும் 1 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

எல்லா எண்களுக்கும் இந்த ஒன்றாம் எண்ணே தலைமை வகிக்கிறது. நமது சூரியக் குடும்பத்தின் தலைவனான சூரியன் தான் இதனை ஆட்சி செய்கிறார். இந்த எண்ணில் பிறந்தவர்கள் பழகுவதற்கும், பார்வைக்கும் கம்பீரமானவர்கள். தன்னம்பிக்கை இவர்களிடம் அதிகம் இருக்கும். இவர்கள் மற்றவர்களைக் கடுமையாக வேலை வாங்குவார்கள். ஆனால் அதே சமயம் மனித நேயத்துடனும் அவர்களுடன் நடந்து கொள்வார்கள். மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்க மாட்டார்கள். தங்களின் பிரச்சினைகளைக்கூடத் தாங்களே சமாளித்துக் கொள்ளும் திறமையுடையவர்கள். அடுத்தவர்களுடன் விவாதித்தால் கௌரவம் போய்விடும் என்று நினைப்பவர்கள்.

அரசியல் அல்லது அரசு சார்ந்துள்ள தொழில்கள், உத்தியோகங்கள் இவர்களுக்கு நிச்சயம் ஏற்படும். ஒன்றின் எண் ஆதிக்கம் நன்கு அமைந்திருந்தால், (பெரும்பாலும்) இவர்கள் அரசியலில் பெரும் செல்வாக்குடன் விளங்குவார்கள். ஆனால் நாணயமான அரசியல்வாதிகள் என்று பெயர் எடுப்பார்கள். (இந்த எண்காரர்கள் மட்டும்தான்). மற்றவர்கள் அரசியலில் ஈடுபட்டால் சுயநலம், பண வேட்கையும் அதிகமாகக் கொண்டு இருப்பார்கள். அதிகாரம் காண்பிப்பதில் இவர்கள் மிகவும் ஆசை கொண்டவர்கள். மற்றவர்களால் மதிக்கப்படுவார்கள். கடின உழைப்பும், கண்டிப்பான நடத்தையும் இவர்களைத் தலைமை ஸ்தானத்திற்குக் கொண்டு செல்லும்.

மனதில் ஊக்கமும், எதையும் தாங்கும் மனோபலமும் கொண்டவர்கள். தோல்வி ஏற்படுவதைத் தாங்கிக் கொண்டு மீண்டும் மீண்டும் மனத்துணிவுடனும், புதிய திட்டத்துடனும் சலிக்காமல் செயலாற்றுவார்கள். புதிய செய்தியினை ஆராய்வதில் மகிழ்ச்சியடைவார்கள். நேர்மையான முறையிலேயே எதையும் அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். தாங்கள் உடுத்தும் உடைகள் மற்றும் அணியும் பொருள்கள் மிகவும் மதிப்பாகத் தெரிய வேண்டும் என்று அதற்காகச் செலவு செய்வார்கள். மன மகிழ்ச்சிக்காக தாராளமாகச் செலவு செய்யத் தயங்காதவர்கள்.

தாங்கள் உதவுவதைக் கூட வெளிப்படையாகச் சொல்லி விளம்பரம் அடைய ஆசைப்பட மாட்டார்கள். சூரிய புத்திரன் கர்ணன் இவரது ஆதிக்கம் நிறைந்தவர்கள். எதிரியுடன் நேரடியாகப் போரிட்டு வெற்றி பெற வேண்டும் என்று விரும்புவார்களே தவிரக் குறுக்கு வழியைத் தேட மாட்டார்கள். இதனால்தான் சகுனியின் சதித் திட்டங்களை எல்லாம் கர்ணன் எதிர்த்துக் கொண்டே இருந்தான். தங்களின் இரக்க குணத்தால் பல பிரச்சினைகளையும் சந்திப்பார்கள். ஆனால் நல்ல பெயரும் புகழும் நிச்சயம் அடைவார்கள். "இவர்தான் எனது நண்பன், இவர்தான் எனது எதிரி" என்று எதையும் மறைத்து வைக்காமல் கூறிவிடுவார்கள். மிகுந்த ரோஷமும், எதையும் எடைபோடும் குணமும் உண்டு.

வாக்குறுதி கொடுத்துவிட்டால் எப்பாடு பட்டாவது அதை நிறைவேற்றுவார்கள் பொதுவாக சோம்பேறித்தனமும், பொறாமையும் இவர்களுக்குப் பிடிக்காது. அடுத்தவர் பொருட்களையும், சொத்துக்களையும் தீயென வெறுத்து ஒதுக்கி விடுபவர்கள் இவர்களே. படிப்பறிவை விடப் பட்டறிவு (அனுபவம்) அதிகம் உண்டு. இந்த எண் சுறுசுறுப்பையும், படிப்பில் ஆர்வத்தையும் கொடுக்கும். வாசஸ்தலங்களும், பெரும் பயணங்களும் இவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

எந்த வணிகத்திலும், நேர்மையையும், வாக்குறுதியையும் கடைப்பிடிப்பார்கள். இலாபத்திற்காகத் தங்களது மனட்சாட்சியை ஒதுக்கமாட்டார்கள். தேவையானால் பெருந்தன்மையுடன் மற்றவர்களுக்கு விட்டுக்கொடுத்து விடுவார்கள். ஆனால் மற்றவர்கள் அலட்சியம் செய்தால் மட்டும் இவர்களால் தாங்கமுடியாது. அவர்களை உண்டு அல்லது இல்லை எனச்செய்துவிடுவார்கள். ஆனால் நேர்மையான வழியில் தான் நடப்பார்கள். பிறருக்கு தீங்குசெய்ய மாட்டார்கள். எப்பேர்ப்பட்ட எதிரியும், நேராக வந்து மன்னிப்புக் கேட்டால், உடனே மன்னிக்கும் மாண்பு படைத்தவர்கள். மீண்டும் அவர்களுக்கு உதவியும் செய்வார்கள். பொதுவாகத் திருமணம் காலம் கடந்தே நடைபெறும். காதல் விடையங்களில் ஈடுபாடு ஏற்படும் என்றாலும், ஏமாறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். மனைவிக்கும், நேரமொதிக்கி அவளைமகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும்.

அரசியலில் வெற்றிபெற ஒரு புகழ்பெற்ற கட்சியோ அல்லது இயக்கமோ இவர்களுக்குத் தேவை. காரணம் மக்களை ஆசைகாட்டி ஏமாற்றும் வித்தைகள் இவர்களுக்குத் தெரியாது. பொதுமக்களுக்கு உண்மையான மனத்துடன் துணிந்து நன்மைகளைச் செய்வார்கள். மக்களின் பிற்கால நன்மைகளுக்காக துணிந்து காரியங்களைச் செயல்படுத்துவார்கள். எண்ணின் பலம் குறைந்தால் மேற்சொன்னபலன்கள் மாறுபடும். சோதிடம், ஆன்மீகம், வைத்தியம் போன்றகலைகளில் ஈடுபாடு உண்டாகும். தனிமையில் அதிகமாக சிந்திக்கவும், செயலாற்றவும் விரும்புவார்கள்.

### உடல் அமைப்பு

நடுத்தரமான உயரம், கம்பீரமான பார்வை, எடுப்பான நெற்றியும் உண்டு. நீண்ட தோள்களும் நன்கு வளைந்த புருவமும் உண்டு. உறுதியான பற்கள் உண்டு. ஆண்தன்மை உடைய தோற்றம் உண்டு. நடையில் ஒரு கம்பீரம் காணப்படும். பெண்களாக இருந்தால் ஓரளவு ஆணாதிக்க உடல் அமைப்பும், குணங்களும் உண்டு. கணவனைத் தனது ஆதரவிற்குள் கொண்டு வருவார்கள். அவரை நல்ல வழியில் உயர்த்தி விடுவார்கள். அன்பையும் கடினமாகவே காட்டுவார்கள். நல்ல தலைமுடியும் உண்டு. கண்களில் கூச்சம், பார்வைக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. சதைப்பிடிப்பான தோற்றம் உண்டு. அடிக்கடி தலைவலி ஏற்படும்.

### அதிர்ஷ்ட நாட்கள்

ஒவ்வொரு மாதத்திலும் 1, 10, 19 மற்றும் திகதி மாதம் ஆண்டு கூட்டினால் 1 வரும் தினங்கள் அதிர்ஷ்டமானவை 28ஆந் திகதி நடுத்தர பலன்களே. 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பல நல்ல பலன்கள் தானே வரும் ஆனால் நாம் தேடிச் சென்றால் தலைகீழ் பலன்களே ஏற்படும். 2, 7, 11, 16, 20, 25, 29 திகதிகளில் ஓரளவு நல்ல பலன்கள் ஏற்படும்.

### அதிர்ஷ்ட இரத்தினம், உலோகம்

1) தங்க மோதிரம், ஆபரணங்கள் அணிவது நன்மை தரும்.
2) மாணிக்கம் (Ruby), புஷ்பராகம் (Topaz), மஞ்சள் புஷ்பராகம் அணிவது மிக்க நலம் தரும்.
3) சிவப்பு இரத்தினத் (Red Opal)தில், சூரிய காந்தக்கல் (Sun Stone) ஆகியவையும் மிக்க நன்மை தரும்.

### அதிர்ஷ்ட நிறங்கள்

பொன்னிற உடைகளும், மஞ்சள், இலேசான சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களும் நன்மை தரும். கறுப்பு மற்றும் பாக்கு நிற உடைகளையும் வர்ணங்கள் உபயோகங்களையும் தவிர்க்க வேண்டும்.


### 1ஆம் திகதி பிறந்தவர்கள்

பொதுவாகத் தன் விருப்பப்படியே நடப்பவர்கள். இவர்களுக்கு பிறரை அனுசரித்து போகும் குணம் குறைவு. பொறுமையுடன், மற்றவர்களையும் அரவணைத்துச் சென்றால், வாழ்க்கையில் பெரும் வெற்றி அடையலாம். தன்னம்பிக்கை மிக உண்டு. அரசு மற்றும் அதிகார உத்தியோகங்களுக்குச் செல்வார்கள்.

### 10ஆம் திகதி பிறந்தவர்கள்

சூரிய ஆதிக்கம் ஓரளவு குறைந்துள்ளதால், மற்றவர்களை அனுசரித்து அன்புடன் நடந்து கொள்வார்கள். எதிலும் ஒரு நிதானம், ஆலோசனை உண்டு. எப்படியும் புகழ் அடைந்து விடுவார்கள். மனோ சக்தியும், தன்னம்பிக்கையும் உண்டு. பொருளாதாரத்தில் மட்டும் அடிக்கடி ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும். பணம் நிர்வகிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)




கிளிநொச்சி மாவட்டத்தில் அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் பளை மகா வித்தியாலயம், மாசார் மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளைப் பார்வையிட அவுஸ்திரேலிய செனட் சபை உறுப்பினர்கள் குழு அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவழைத்து வரப்படுவதையும் செனட் சபை உறுப்பினர்கள் குழுவுடன் இணைந்து வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் ஆகியோர் புனரமைக்கப்பட்டு வரும் கட்டடங்களை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம் (படங்கள்:-என்.குமார்)

# யாழ். மாவட்டத்தில் தாய், சேய் மரண வீதம் அதிகரித்துள்ளது

## கொழும்பு குடும்பநல சுகாதார பணியக பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில், யாழ். மாவட்டத்தில் தாய், சேய் மரணவீதம் அதிகரித்துள்ளதாக கொழும்பு குடும்பநல சுகாதார பணியக பிரதிப் பணிப்பாளர் திருமதி சித்திரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான தற்காலிக நியமனம் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் வைத்திய சேவையில் நீண்ட காலமாக ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருகிறது.

இருப்பினும் வைத்திய சேவைக்கென பலர் புதிதாக நியமிக்கப்பட்டு வருகின்றனர். அதன் ஒரு கட்டமாகவே குடும்பநல உத்தியோகத்தர்கள் 222 பேர் தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

குடும்பநல உத்தியோகத்தர்களின் பங்களிப்பு சமூகத்திற்கு கட்டாயம் தேவையானதொன்று.

யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரை தாய், சேய் மரண வீதம் கட்டுப்படுத்தப்பட்டு வந்தாலும் தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் அதிகமாகவே காணப்படுகிறது.

இந்த தாய், சேய் மரண வீதத்தை குறைப்பதற்கு குடும்பநல உத்தியோகத்தர்களின் பங்களிப்பு அவசியமானதொன்று . யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகமாக வட மாகாணத்திலேயேயுள்ளனர். அவர்களுக்கு குடும்பநல உத்தியோகத்தர்களின் பணி மிக அவசியமானது.

போரினால் அவர்களது தேவைகள் சரிவர அறியப்படவேண்டும். அதற்காகவே குடும்பநல உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# தெற்கு அதிவேக பாதையில் பயணிகள் பேருந்து சேவை

(கொழும்பு)

தெற்கு அதிவேக பாதையில் பயணிகள் போக்குவரத்து பேருந்து சேவையை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன்முதற்கட்டமாக புறக்கோட்டையில் இருந்து காலி பின்னதூவ வரையான பேருந்து சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சங்கங்கள் கூட்டாக இந்த பேருந்து சேவையை நடைமுறைப்படுத்தவுள்ளன.

இதனையடுத்து சொந்த வாகனம் இல்லாதவர்கள் கூட தெற்கு அதிவேக பாதையின் ஊடாக குறுகிய நேரத்தினுள் கொழும்பு நோக்கி பயணிப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளதென பிரதியமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# சர்வதேச ஒலிம்பிக் போட்டிக்கு செல்லும் மாணவனுக்கு கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவன் சி. துஸ்யந்தன் அகில இலங்கை ரீதியில் (100 மீ.ஓட்டம்) ஒலிம்பிக் தெரிவுப் போட்டியில் முதலிடம் பெற்று கிறிஸ் நாட்டின் எதென்ஸ் நகரில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

மேற்படி மாணவனை கௌரவித்து வழியனுப்பும் வைபவம் எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 3 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் சிவபூமி பாடசாலையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக இந்திய உயர்ஸ்தானிகராலய இராஜதந்திரி அலுவல்கள் நாயகம் வி. மகாலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

# புதிதாக 3 மீன்பிடித் துறைமுகங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

மூன்று புதிய மீன்பிடி துறைமுகங்களை நிர்மாணிக்க மீன்பிடித்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்குரிய பிரதேசங்களை அடையாளங்காணும் நடவடிக்கைகள் தற்போது அமைச்சின் நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரதேச மீனவர்களின் அவசியத்தை நிர்ணயித்தே புதிய துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் ஏற்கனவே குருநகர் மற்றும், மயிலிட்டி மீன்பிடி துறைமுக நடவடிக்கைகள் தற்போது முன்னெடுத்து செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடலில் பாதிக்காத வகையில் கடற்கரை பிரதேசங்களை சேதமாக்காத வகையிலுமே இந்த மீன்பிடி துறைமுகங்கள் அமையப்பெறவுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் மூன்று இலட்சத்து 39 ஆயிரத்து 730 மெற்றிக் தொன் மீன்கள் பிடிக்கப்பட்ட அதேவேளை இந்த வருடத்தில் 4 இலட்சம் மெற்றிக் தொன் மீன்களை பிடிக்க திட்டமிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அதிபர் பதவி வெற்றிடம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மு/ பாண்டியன் குளம் மகா வித்தியாலயம், மு/ துணுக்காய் அ.த.கபாடசாலை, மு/ உயிலங்குளம் அ.த.க பாடசாலை, மு/ ஆலங்குளம் அ.த.க பாடசாலை, மு/ கருவேலங்கண்டல் அ.த.க பாடசாலை போன்ற பாடசாலைகளில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.

இதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையிலுள்ளவர்கள் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை தரம்-I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை தரம்-2-I போன்ற தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றது.

மேற்படி தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை 2-IIஉள்ளவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன் பதிவுத்தபாலில் வலயக் கல்விப்பணிப்பாளர், துணுக்காய் கல்வி வலயம், மல்லாவி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-15)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை நாவலர் வீதி ஆனைப்பந்தி சந்தியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை ஜனசக்தி சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.


அத்துடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை 5 ஆம் ஒழுங்கை அரசடி வீதியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை சிவன் புது வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே, இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினைஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# வரலாற்று புகழ்மிக்க வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவ சிறப்பு மலர்-13.06.2011

## ஆலய வரலாறு

எழில் மிகுந்த இலங்கைத் திருநாட்டில் முல்லையும் மருதமும் நெய்தலும் ஒன்றிணைந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் பழம்பெரும் கிராமம்தான் வற்றாப்பளை. அதன் கீழ்த்திசையில் முல்லைத்தீவு நகரத்துக்கும் வற்றாப்பளைக் கிராமத்துக்கும் இடையில் நந்திக்கடல் அமைந்துள்ளது. நந்திக்கடலின் கரையில் கண்ணகி குடிகொண்ட அழகிய ஆலயம் இராஜகோபுரத்துடன் கம்பீரமாக காட்சிதருகின்றது.



வற்றாப்பளைக்கு கண்ணகி வருகை தந்த வரலாற்று சிலம்பு கூறல் காவியத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

*அங்கணாமைக் கடவை*
*செட்டிபுலமச் சூழ்*
*ஆன தொரு வற்றாப்பளை*
*மீதுறைந்தாய்*

என்று கண்ணகித்தாய் வற்றாப்பளைக்கு வந்த நிகழ்ச்சி சொல்லப்படுகின்றது.

மதுரையில் அரசநீதி பிழைத்த பாண்டிய மன்னனை அழித்து மதுரையைத் தகனம் செய்தபின் ஈழவளநாட்டுக்கு வந்த கண்ணகி பத்தாவது இடமான வற்றாப்பளையில் வந்தமர்ந்ததாக வரலாறு கூறுகிறது. வைகாசிமாத பௌர்ணமி தினத்தில் நந்திக் கடற்கரையில் மாடு மேய்த்தபடி விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் முன்பாக ஒரு மாலைப் பொழுதில் நரைதிரை மூப்புடன் கூடிய மூதாட்டி காட்சி தருகின்றாள். ஒரு பட்ட வேப்பம் படவாள் (படவாள் என்பது கலப்பை செய்வதற்குப் பயன்படும் மரப்பகுதி மீது அமர்ந்திருந்தவாறே,

"மக்காள் பசிக்கிறது..." என்று கேட்கிறாள். பசி என்று வந்தவர்க்கு உணவளிக்கும் உயர்ந்த பண்பு கொண்ட வன்னியின் பெருங்குடியினரின் பிள்ளைகளான அந்தச் சிறுவர்கள் தாமதிக்கவில்லை. வீட்டிற்கு ஓடிச்சென்று ஒரு சிறுவன் அரிசி கொண்டுவர, இன்னொருவன் எருமை பால் கறக்க, இன்னொருவன் நெருப்புமூட்ட பால் கறக்கப் பயன்படும் கலயத்தில் சாதம் அவிக்கப்பட்டு முடிகிறது. அடுத்து இலைகள் இல்லை என்று சிறுவர் அங்கலாய்க்க ஆச்சி விடத்தல் இலை எனப்படும் மிகச் சிறிய இலையைப் பிடுங்கிவந்து நீர் தெளிக்குமாறு கூறுகின்றாள் .நீரை தெளிக்க அந்த இலை தாமரை இலையாகிறது.

அதில் அமுதைப் படைத்தவுடன் "இரவில் உணவு உண்ண விளக்குவைக்க வேண்டும்" என்ற எண்ணம் சிறுவர்கட்கு உதயமாகின்றது. பசு நெய் கொண்டுவர சிறுவன் ஒருவன் வீட்டுக்கு ஓட முனைகின்றான். தடுக்கிறாள் ஆச்சி. உப்பு நீரில் விளக்கெரிக்க உத்தரவிடுகின்றாள்.

என்ன அதிசயம் "உப்பு நீரில் விளக்கு எரிகிறது" சிறுவர்கட்கு பெரிய ஆனந்தம். அமுதை ஏற்ற ஆச்சி இப்போது தலையில் பேன் கடிக்கிறது என்கிறாள். சிறுவர்கள் பேன்பார்க்க தலையை விரிக்கிறார்கள். என்ன அதிசயம் தலையில் அழகிய விழிகள். இப்போது தான் சிறுவர்கள் பயந்து போகிறார்கள். அவர்களைத் தேற்றிய தாய் சொல்கிறாள்.

"மக்காள் பயப்படவேண்டாம்... நான் கண்ணகித் தெய்வம்... மதுரையில் இருந்து கதிர்காமம் செல்லும் வழியில் உங்களுக்கு காட்சி தந்தேன்... இதேமாதம் விசாகத்துக்கு அண்மித்த பௌர்ணமிநாளில் நீங்கள் எனக்குப் பொங்கி வழிபாடு செய்தால் நீங்கள் கேட்ட வரம் தருவேன்" என்று கூறி மறைகிறாள்.

அச் செய்தி ஊரெங்கும் பரவுகின்றது. பெரியவர்கள் வந்து பார்க்க பட்ட வேப்பம் படவாள் தழைத்திருக்கிறது. அந்த மரம் நின்ற இடமே இன்றைய மூலஸ்தானம்.

அதில் இருந்து தொடங்கியதே வருடாந்தப் பொங்கல் உற்சவம். பிற்காலங்களில் அம்மனின் அனுக்கிரகம்பெற்ற "பக்தஞானி" என்ற ஞானியொருவர் பாக்குத் தெண்டல், தீர்த்தமெடுத்தல், பொங்கலிடல் போன்ற கருமங்களை அம்மனின் கட்டளைப்படி ஒழுங்குபடுத்தினார். அதன்படி தீர்த்தம் தற்போது வங்களா விரிகுடாக் கடலில்- சிலாவத்தைத் தீர்த்தக்கரையில் எடுத்து வரப்பட்டு பொங்கல் நடைபெறும் நாளுக்கு முந்திய திங்கட்கிழமையில் இருந்து 7 நாட்கள் தொடர்ந்து முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்திலும் அதன்பின் எட்டாம் நாள் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திலும் உப்பு நீரில் தீபம் ஒளிரவைக்கப்படுகிறது.

இவ்வாறான பெருமை மிக்க ஆலயத்தில் நிகழ்ந்தேறிய முக்கியமான அற்புதங்கள்

1. பட்ட வேப்பம் படவாள் தழைத்தமை.
2. உப்பு நீரில் விளக்கு எரிதல்.
3. பனிச்சை மரம் ஆடி பறங்கியை துரத்தியமை.
4. ஆலய நகைகளை திருடிய திருடன் கண்பார்வை இழந்து போனதால் பிடிபட்டமை.
5. குட்டரோகியின் ரோகம் குணமானமை.

இது மட்டுமல்லாது 2008 இல் விஜய தசமி நாளன்று அம்மன் எழுந்தருளி விக்கிரகம் திருவூஞ்சலில் இருந்து விழுந்து இடப்பெயர்வை குறியீடாக எதிர்வு கூறியமை எல்லாம் வெளித் தெரிந்த அற்புதங்கள்.

இத்துடன் ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவராக இருந்த கனகையா முதலியாருக்கு மழையில் நனைந்த ஆச்சி வடிவில் காட்சி கொடுத்து மடங்கள் கட்ட உத்தரவிட்டது வெளித்தெரிந்த அற்புதங்களே!

இது மட்டுமன்றி உரைக்கப்படாது ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறங்கும் அற்புதங்கள் அனேகம்!

வற்றாப்பளைக் கண்ணகித்தாய்... இங்குள்ள மக்களுக்கு அவர்களின் வீட்டில் இருக்கும் "பெத்தாச்சி" போன்றவள். அவள் அக்கிரமங்களை அழிக்கத் தயங்குவதில்லை. அவளுக்கு எது அக்கிரமம், எவர் அக்கிரமக்காரர் என யாரும் சொல்லவும் தேவையில்லை.

தனது பக்தர்களை அவள் என்றும் காத்துக் கொண்டேயிருப்பாள்.

அந்தத் தாயின் அற்புதத்தால்தான் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் முதன்முதலாக வற்றாப்பளை மீளக் குடியிருத்தப்பட்டது. இடப்பெயர்வின் பின்னர் இராணுவத்தினர் ஆலயத்தை மிகப்புனிதமாகப் பயபக்தியுடன் பராமரித்து மீளவும் நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இன்று அவளின் அருளால் அழகிய இராஜகோபுரம், மணிக்கோபுரத்துடன் நீண்ட தூரத்துக்கு காட்சி கொடுக்கிறது அன்னையின் ஆலயம்!




PVR Jewellery

50 வருட பாரம்பரியத்துடன் மக்களின் மனங்களை வென்ற நகையகம்

பி.வி.ஆர் ஜுவல்லரி

Main Street, Mullaithivu.

Tel:+(94) 727272456, +(94) 772492336, +(94) 716227680

V.Piratheepan (B.B.A)

E-mail: info@pvrjewellery.lk, piratheep24@hotmail.com

பிள்ளையார் பல்பொருள் வாணிபம்

பிரதான வீதி, முள்ளியவளை. தொ.பே: 077 8092212

உரிமையாளர்: யோ.சிவாகரன்

# வரலாற்று புகழ்மிக்க வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவ சிறப்பு மலர்-13.06.2011


## பொன்னம்பலம் பல்வகை வாணிபம்

பலசரக்கு பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும், உள்ளூர் உற்பத்தி பொருட்கள் கொள்வனவும் விற்பனையும் No.1 நாடு 10Kg, No. 1 50Kg அரிசி வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

ஏ-9 வீதி, கரடிபோக்கு, கிளிநொச்சி.
தொ.பே: 021 3208029

## சேரமான் அரிசி ஆலை

இல.365, கந்தபுரம், கிளிநொச்சி.

அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
10 Kg நாடு
50Kg நாடு

## சிவனருட் செல்வன் அரிசி ஆலை

உருத்திரபுரம் வீதி, கரடிபோக்கு, கிளிநொச்சி.

No.1 10Kg நாடு , No. 1 50Kg நாடு, பூநகரி மொட்டகறுப்பன் அரிசி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

## மாயா உணவகம் (MAYA)

A-9 வீதி, திருமுறிகண்டி, கிளிநொச்சி.

## இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்

துவிச்சக்கர வண்டிகள், அதன் உதிரிப் பாகங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், டிஸ் அன்ரனா வகைகள்என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்



52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 222 3096

வன்னியில்- ஏ-9 வீதி, கரடிபோக்கு, கிளிநொச்சி.

## Midea Electro Mart / Midea PC Show Room

e-mail: midea21@gmail.com

No:1-1, 1-H, STANLEY ROAD,JAFFNA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646
www. mideamart.com

BRANCH:
NO.4, NEW MARKET, CHAVAKACHCHERI.
Tel: 021-2270268, Fax: 021-2270129



Authorized Dealer for Abans Ltd.

| COMPUTER | INTEL DUAL CORE | INTEL DUAL CORE | INTEL CORE I3 | INTEL CORE I5 |
|---|---|---|---|---|
| Processor | Intel Dual Core 3.2 GHZ | Intel Dual Core 3.2 GHZ | Intel Core I3 3.06GHz | Intel Core I5 3.20GHz |
| Mother board | Intel Chipset G41-D3B | Intel Chipset G41-D3B | Intel DH55PJ | Intel DH55PJ |
| Memory | 1GB DDR-III, 800 MHZ | 2GB DDR-III, 800 MHZ | 2GB DDR -III | 2GB DDR - III |
| Hard disk | 250 GB SATA-7200 RPM | 500 GB SATA-7200 RPM | 500GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM |
| Disk drive | LG DVD Writer | LG DVD Writer | ATX 500W Gigabyte | ATX 500W Gigabyte |
| Casing | ATX 500W Gigabyte | ATX 500W Gigabyte | LG DVD Writer | LG DVD Writer |
| Monitor | DELL LCD 18.5" | DELL LCD 18.5" | DELL LCD 18.5" | DELL LCD 18.5" |
| Key board | I - NEX USB, PS/2 | I - NEX USB, PS/2 | I - NEX USB, PS/2 | I - NEX USB, PS/2 |
| Mouse | I - NEX Optical USB,PS/2 | I - NEX USB/Ps2 | I - NEX USB, PS/2 | I - NEX USB, PS/2 |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker |
| Price | Rs.38,500.00 | Rs.39,900.00 | Rs.49,900.00 | Rs.60,900.00 |



PowerTree UPS = 4100
HUAWEI E173 Multi

சாவகச்சேரியில் விசேட விலைக்கழிவில்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Toshiba Mini | HP Mini | ACER4738Z Laptop | HP Pavilion dv6t 3200 | HP 620 | HP 625 | HP Probook 4520s |
| Atom Intel 1.6GHz | Atom Intel 1.6GHz | Intel Pentium P6200 | Intel Core I3 | Intel Dual Core 2.2GHz | AMD 2.2GHz | Intel core I3 2.5GHz |
| DOS | Win 7 Starter | DOS | Win 7 Home Pre | Win7 Home Pre | Win7 Home Pre | Win7 Home Pre |
| 1GB | 1GB | Intel HD Graphics | VGA 1GB HD Grap | 2GB | 3GB | 2GB |
| H.D250GB | H.D 160GB | RAM 2GB DDR III | RAM 3GB DDR III | 320GB HDD | 320GB HDD | 320GB HDD |
| 128MB | 128 MB | H.D 320GB | HD 500GB | DVD Writer | DVD Writer | DVD Writer |
| LCD 10.1" | LCD 10.1" | DVD Super Multi | WebCam with Mic | 796MB | 796MB | VGA 1GB HD Grap |
| WIFI BlueTooth | WIFI BlueTooth | WIFI | WIFI | Webcam with Mic | Webcam with Mic | WebCamera With Mic |
| WebCam With Mic | Webcam with Mic | Webcam with Mic | DVD Super Multi | LCD 15.6" | LCD 15.6" | LED 15.6" |
| | | LCD 15.6" | LED 15.6" | WIFI BlueTooth | WIFI BlueTooth | WIFI |
| Rs.43,900.00 | Rs.39,900.00 | Rs.63,900.00 | Rs.79,900.00 | Rs.60,900.00 | Rs.60,900.00 | Rs.70,900.00 |

Warranty-3 Years Manufacturer's Warranty, 1 Year Service Warranty

உலகத் தரம் வாய்ந்த வீட்டு பாவனை மின் உபகரணங்களை Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோகத்தையும் பெற்றிடலாம்!




## பதுசன் புடைவை அன் அழகுப் பொருட்கள் வாணிபம்

முல்லைவீதி, தண்ணீரூற்று.

# வரலாற்று புகழ்மிக்க வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவ சிறப்பு மலர்-13.06.2011

## ஆலய பிரதமகுருவின் ஆசிச்செய்தி



முப்பது ஆண்டுகளுக்கு மேல் கட்டப்பட்டுவந்த இராஜ கோபுரத்திற்கு கர வருடத்தில்தான் கும்பாபிஷேகம் நிகழ கண்ணகை அம்மனின் அருள் கிடைத்தது.

கும்பாபிஷேகத்தின் போது மணிக்கோபுரத்தில் வெள்ளைப் பாம்பு நின்று ஆடிய காட்சி அற்புதமாகும். இவ்வாலயத்தில் தான் கடல் நீரில் விளக்கு ஏற்றி வைகாசி திங்கள் பௌர்ணமிக்கு முதல் வரும் திங்கட்கிழமை' பொங்கல் வெகுசிறப்பாக நடைபெறுகின்றது.

திருமணம் நடக்காதவர்கள் திருமணம் நடக்கவேண்டியும், குழந்தைப் பேறு கிடைக்காதவர்கள் குழந்தை வரம் வேண்டியும், நோய் தீராதவர்கள் நோய் தீர வேண்டியும் அம்மனுக்கு பொங்கல் செய்து வழிபடுகின்றனர்.

பக்தர்கள் தாம் நினைத்தது நிறைவேற நேர்த்திக்கடன்களைச் செய்து அம்மனின் அருளைப் பெறுகின்றார்கள்.

வேண்டுவார்க்கு வேண்டும் அருள்கொடுக்கும் கண்ணகி அம்மனின் அருள் சொல்லில் அடங்காது.

சுபமஸ்து

பிரதம குரு சிவஸ்ரீ சிவ கந்ததாசக் குருக்கள்
உதவிக் குருக்கள் பிரம்மஸ்ரீ கஜேந்திரக் குருக்கள்

## பரிபாலன சபை செயலாளரின் செய்தி

இடப்பெயர்வின் பின்னர் மீளவும் புதுப்பொலிவுடன் எமது ஆலயம் விளங்குகின்றது. அழகிய இராஜகோபுர மணிக்கோபுரம் என்பன அழகுக்கு அழகு சேர்க்கின்ற இந்தச் சூழலில் இவ்வருடம் பொங்கல் உற்சவம் நடைபெறுகிறது.

அற்புதங்களின் விளைநிலமாம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை அனைவரும் தரிசித்து அன்னையின் அருள் பெற பிரார்த்திக்கின்றேன்.

திரு.சு.கிருஸ்ணமூர்த்தி,
செயலாளர், பரிபாலன சபை.


அன்னம் பல்பொருள் வாணிபம்

மின் உபகரணங்கள், லெமினேற்றிங், போட்டோ கொப்பி, குளிப்பானம்
அழகு சாதன பொருட்கள், பலசரக்குப் பொருட்கள், சீமெந்து வகைகள்
**அனைத்து பொருட்களும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்**
சிலாவத்தை சந்தி. உரிமையாளர்: எஸ்.பஞ்சலிங்கம்

இனிமையான நினைவுகளுக்கு...

GREEDY'S
Hotel & Restaurant



- இந்திய, இலங்கை, சீன உணவு வகைகள்
- AC, NON AC அறைகள் வாடகைக்கு உண்டு
- T.V இலவச இன்டர்நெட் சேவை
- போக்குவரத்து தேவைகளுக்கான வாகன வசதி செய்து தரப்படும்

205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் பில்டிங்)
தொ.பே: 021 2221939, 0776081701, 0778338549

காவேரி சில்க்ஸ்



திருமண பட்டுப்புடைவைகளிற்கு
கைராசியான ஸ்தாபனம்.
இல.48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222333

TOUCHWOOD யாழ். மக்களுக்கு வழங்கும் சந்தன மர முதலீடு

உங்கள் இலாபம் என்னவாக இருக்கும்?

| சந்தன மரங்களின் எண்ணிக்கை | ஆரம்ப சேமிப்பு ரூபா | திட்டமிடப்பட்ட அறுவடை பெறுமதி ரூபா |
|---|---|---|
| 6 | 99,000 | 3,000,000 |
| 12 | 195,000 | 6,000,000 |
| 25 | 385,000 | 12,500,000 |
| 50 | 732,000 | 25,000,000 |
| 100 | 1,397,000 | 50,000,000 |
| 200 | 2,662,000 | 100,000,000 |

நிரந்த இலாபத்தை பெற்றுக்கொடுக்கும் ஒரு முதன்மை விளைபொருள்
உங்கள் முதலீட்டிற்கு TOUCHWOOD இன் 100% பாதுகாப்பும், உத்தரவாதமும்
207, நாவலர் றோட், யாழ்ப்பாணம். தொ.பே:021 7390200

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் இருக்கும்
எமது முதலீட்டு ஆலோசகர்களை அழையுங்கள்
எம்.சியாம்–0777569615

TOUCHWOOD

நவீன 22 கரட் தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

சுகுமாரி நகை மாடம்



ஆடவர், நங்கையர்களின் விருப்பத்திற்கேற்ப ஓடர் நகைகளை
குறித்த தவணையில் விரும்பிய டிசைன்களில் பெற்றுக்கொள்ளலாம்.
கடற்கரை வீதி, முல்லைத்தீவு. தொ.பே: 0243248608, 0778525357

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

கனடா, சுவிஸ், லண்டன் நாடுகளிலிருந்து
7 நாட்களில் பொதிகள் பெற்றுத்தரப்படும்.



லண்டன், சுவிஸ்
450/=
கனடா
500/=

72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்
லண்டன் 1Kg 800 /=
கனடா, அமெரிக்கா, பிரான்ஸ்,சுவிஸ், டென்மார்க்
ஜேர்மனி, இத்தாலி, நோர்வே
1Kg 950 /=

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 222 6113
365 Day Services

# வரலாற்று புகழ்மிக்க வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவ சிறப்பு மலர்-13.06.2011

## பரிபாலன சபைத் தலைவரின் செய்தி

வரலாற்றுப் புகழ்மிக்க எங்கள் கண்ணகித்தாயின் ஆலயத்தில் மூன்று தசாப் தங்களின் பின்னரான ஒரு அமைதியான சூழலில் ஆலயப் பொங்கல் உற்சவம் நடைபெற அம்மனின் அருள் கிட்டியுள்ளது.

கடந்த வருடமும் பொங்கல் உற்சவம் சிறப்பாக நடந்தேறியபோதிலும் பெருந் தொகையான அடியார்கள் கலந்து கொள்ள முடியவில்லை.

இவ்வருடம் இவ்வாறான தடைகள் ஏதுமில்லை என்பதால் பெருந்தொகை யான அடியார்கள் வருகை தருவார்கள் என்பதில் ஐயமில்லை.

உப்பு நீரில் ஒளிரும் எங்கள் தாயின் பாதம் பணிந்து அவள் இன்னருளை எல்லோ ரும் பெற பிரார்த்திக்கின்றேன்.

திரு.மு.குகதாசன்,
தலைவர்,
பரிபாலனசபை.

## வரலாற்று சிறப்பு பெற்ற வற்றாப்பளை கண்ணகையம்மன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க இந்து ஆலயங்களில் ஒன்றாக வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் விளங்குவது யாவரும் அறிந்த ஒன்றாகும். வைகாசி விசாகத்துடன் அண்டிய திங்களொன்றில் இடம்பெறும் பொங்கலுற்சவத்திற்காக இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து பெரும் தொகையிலான பக்தர்கள் கூடுவது வழக்கமாகும்.

இவ்வாண்டு நாட்டில் நிலவிவரும் இயல்பு வாழ்க்கையினால் பல அடியவர்கள் தங்களின் நேர்த்திகளை நிறைவேற்றுவதற்காக வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. முல் லைத்தீவு மாவட்டத்திலேயே ஒரேயொரு இராஜகோபுரம் அமையப்பெற்ற சிறப்பினை கொண்ட இவ்வாலயத்தில் கலைநுட்பம் நிறைந்த கோபுரம் கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்பு நடைபெறு கின்ற முதல் பொங்கலாக இவ்வருட பொங்கல் அமைவதும் சிறப்பான ஒன்றாகும். இயற்கை எழில் நிறைந்த அமைவிடத்தை பெற்றிருக்கின்றது இவ்வாலயம். நந்திக்கடல் ஓரத்தில் இருந்து அடியவர்க்கு அருள்புரிகின்ற அம்மனின் சிறப்பு சாதாரண வார்த்தைகளினால் கூறிவிட முடியாது.

நான் முல்லைத்தீவு மாவட்ட செயலாளராக பதவியேற்ற பின்னர் சந்திக்கின்ற இப்பொங்கல் விழாவினை நாம் சிறப்பாக கொண்டாட வேண்டியதற்கு மிகவும் பிரதான காரணமாக அமைவது இவ்வாலயம் வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒரு ஆலயம் என்பதேயாகும். அந்த வகையில் இவ்வருட பொங்கல் சிறப்பாக நடந்தேற மாவட்டச் செயலாளர் என்ற வகையில் எனது மனப்பூர் வமான ஆசியினை கூறிக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அ.பத்திநாதன்
மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், முல்லைத்தீவு.


பகவதி களஞ்சியம்
டிப்போ வீதி, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி. தொ.பே: 021 4922 184
உரிமையாளர்: சி.ரகுநாதன்

இனிய நிலா உணவகம்
பிரதான வீதி, முள்ளியவளை.

அதிநவீன ஆடைத் தெரிவுகளுக்கு
ஸ்ரைல் பார்க்
எடுப்பான தோற்றம் பெற....
வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம்புதிய அழகிய
ஆடைத் தெரிவுகளுக்கு இன்றே நாடவேண்டிய இடம்

STYLE PARK
171, K.K.S. ROAD,
JAFFNA.




சிறி தேவிகருமாரி
நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
83/01, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
T.P.: 021 5672567

மீண்டும் முல்லை மண்ணில்
குமரன்ஸ் கிறீம் ஹவுஸ்
வற்றாப்பளை, முல்லைத்தீவு.
அனைவர்க்கும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் அருள் பெற வேண்டுகின்றோம்.

சுபா நகை மாளிகை
SUBA NAGAIMAALIGAI
Orders Executed Promptly for Guaranteed Gold Jewellery
MAIN STREET, THANNEEROOTTU,
MULLIYAWALAI.
Ph: 0213200308, 0773330076

Y.SATHEESAN





தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் ஏற்பாட்டில் பால்நிலை பேணல் தொடர்பான பயிற்சி பட்டறை அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் வளவாளராக கலந்து கொண்ட அமைச்சின் மனித வள அபிவிருத்தி திணைக்களத்தின் உதவியாளர் செல்வி சாந்தமலி குமாரவடு கருத்துரை வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# புலனாய்வு உத்தியோகத்தர்களால் சரத்பொன்சேகாவிற்கு பாதுகாப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களைக் கொண்டு பாதுகாப்பளிக்கப்படுவதாக சிங்கள இணையத்தள செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இதுவரைகாலமும் அவர் சாதாரண சிறைக்காவலர்களின் பாதுகாப்பிலேயே வழக்கு விசாரணைகளுக்காக சிறைச்சாலைகளுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். ஆயினும் அண்மைய நாட்கள் தொடக்கம் அவருக்கான பாதுகாப்பு சிறைச்சாலைப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சரத் பொன்சேகாவுக்குப் பாதுகாப்பு வழங்கும் உத்தியோகத்தர்களின் பெயர் விபரங்களை வாரம்தோறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் சிறைச்சாலை அத்தியட்சகர் பணிக்கப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் கருத்து வெளியிட்ட சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர், சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக் கருதியே பிரஸ்தாப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் மேலதிக கரிசனையாகவே பாதுகாப்பு அமைச்சிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த தகவல் சமர்ப்பிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்புக்கென வழங்கிய துப்பாக்கிகளை மீளப்பெற உத்தரவு

(கொழும்பு)

நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களினதும் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட ரி56 ரக துப்பாக்கிகளை மீளப் பெற பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் நிலவிய அச்சுறுத்தலான சூழ்நிலையை கருத்திற் கொண்டே பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பை உத்தேசித்து பொலிஸாருக்கு ரி 56 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருந்தன. ஆயினும் தற்போதைய நிலையில் அவ்வாறான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இல்லையென்பதால் அவற்றை மீளப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸார் பொதுமக்களுடன் மிக நெருக்கமான உறவைக் கட்டியெழுப்பவும் பொதுமக்களுக்கான சிநேகபூர்வ பொலிஸ் சேவையொன்றை உருவாக்கும் நோக்கிலுமே பொலிஸார் வசமுள்ள துப்பாக்கிகளை மீளப் பெற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஆயினும் பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பை உத்தேசித்து ஓரிரண்டு துப்பாக்கிகள் மாத்திரம் சகல பொலிஸ் நிலையங்களிலும் வைத்துக் கொள்ள அனுமதியளிக்கப்படும். ஏனையவற்றை பொலிஸ் தலைமையகத்துக்கு ஒப்படைக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் பொதுமக்கள் தொடர்புபடும் கடமைகளுக்குச் செல்லும் பொலிஸாருக்கு துப்பாக்கிகளை எடுத்துச் செல்லவும் அனுமதியில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது. (ஸ்ரீ-2)

# மாவட்ட மட்ட நாட்டுக்கூத்து போட்டி முடிவுகள்

(பூநகரி)

கிளிநொச்சி வலயத்தால் நடாத்தப்பட்ட மாவட்ட மட்ட தமிழ்மொழித்தின நாட்டுக் கூத்துப் போட்டி முடிவுகள் வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் பெயர் விபரம் வருமாறு,

**சிந்து நடைக்கூத்து**

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி/ பாரதி வித்தியாலயம், கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்.

**இசை நாடகம்**

கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளி/ முருகானந்தா மகா வித்தியாலயம், கிளி/பூநகரி மகா வித்தியாலயம்.

**விசேட கூத்துப்போட்டி**

கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை, கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம். (ஸ்ரீ-84)

# 2011.06 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1871-லாப்ரடோரில் சூறாவளி தாக்கியதில் 300 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1917-முதலாம் உலகப் போர்: லண்டன் நகர் மீது ஜேர்மனியப் போர் விமானங்கள் தாக்கியதில் 46 குழந்தைகள் உட்பட 162 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1925-சார்ள்ஸ் ஜென்கின்ஸ் படங்களையும் ஒலியையும் ஒரே நேரத்தில் அனுப்பும் முறையை முதன்முறையாக வெற்றிகரமாகப் பரிசோதித்தார். 10 நிமிட அசையும் படத்தை 5 மைல்கள் தூரத்திற்கு அனுப்பினார்.

★ 1934-ஹிட்லரும் முசோலினியும் வெனிசில் சந்தித்தனர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி பறக்கும் குண்டுகளை இங்கிலாந்து மீது வீசியது. மொத்தம் 11 குண்டுகளில் 4 குண்டுகள் இலக்குகளைத் தாக்கின.

★ 1948-ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கமான தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1952-சோவியத்தின் மிக்- 15 போர் விமானம் சுவீடனின் டிசி- 3 ரக விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது.

★ 1955-சோவியத் ஒன்றியத்தில் முதலாவது வைரச் சுரங்கம் கண்டு பிடிக்கப்பட்டது.

★ 1978-இஸ்ரேலின் பாதுகாப்புப் படையினர் லெபனானை விட்டு விலகினர்.

★ 1981-லண்டனில் இடம்பெற்ற அணிவகுப்பு நிகழ்வு ஒன்றில் சிறுவன் ஒருவன் இரண்டாம் எலிசபெத் மகாராணியை நோக்கி வெற்றுத் துப்பாக்கிக் குண்டுகளைத் தீர்த்தான்.

★ 1983-பயனியர் 10 சூரியக் குடும்பத்தைத் தாண்டிய முதலாவது விண்கப்பல் ஆனது.

★ 2006-நியூ ஹரைசன்ஸ் தனது பயண வழியில் 101,867 கி.மீ தூரத்தில் 132524 APL என்ற சிறுகோளை சந்தித்து அதன் படத்தைப் பூமிக்கு அனுப்பியது.

★ 2007-திருகோணமலையில் மேர்சி கோப்ஸ் என்னும் பன்னாட்டுத் தன்னார்வ அமைப்பின் பிலிப்பைன்ஸ் பணியாளர் ஒருவர் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டார்.

**பிறப்புக்கள்**

★ 1831-ஜேம்ஸ் மாக்ஸ்வெல், ஸ்கொட்லாந்து இயற்பியலாளர் (இ.1879)

★ 1933-யாழ்வாணன், ஈழத்து எழுத்தாளர் (இ.1996)

★ 1944-பான் கீ மூன், ஐக்கிய நாடுகள் அவையின் எட்டாவது பொதுச் செயலாளர்

★ 1966-கிரிகோரி பெரல்மான், ரஷ்யக் கணிதவியலாளர்

★ 1987-ஜி.வி.பிரகாஷ்குமார், தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்

**இறப்பு**

★ 1972-கியோர்க் வொன் பெக்கெசி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1899)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்

## ஆன்மீகம் 21

## சிந்தனைகள் பெருகிவிட்டால்...!

“தமிழ்நாடு அரசின் முத்திரையே கோயில் கோபுரம்தான். ஆனால், ஆட்சியில் இருப்பவர்கள் பெரும்பாலும் கடவுளையும் கோயிலையும் மறுதலிப்பவர்களாகவே இருக்கிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து?”

அது அவரவர் கருத்துச்சுதந்திரம் அதை நான் முழுமையாக மதிக்கிறேன்!

எதையும் மூடத்தனமாக நம்பமறுப்பது. என்ற விதத்தில் இது நல்லதுதான் அதேசமயம் உண்மையை அறிந்து கொள்ளும் ஆர்வம் இன்றி எதிர்ப்பது என்றால் அது அபத்தமானது.

கடவுள் எதிர்ப்பு என்பது ஏன் வந்தது? மதங்கள் அளவுக்கு அதிகமாக திணிக்கப்பட்டதால்தான் நாத்திகம் இங்கு தளைத்தது. அடிப்படையான விளக்கங்கள்கூட கொடுக்கமுடியாதவர்கள் மதங்களைப் பரப்ப முனைந்ததாலேயே எதிர்ப்பு வலுத்தது.

பொதுவாகவே சபையில் எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களே கெட்டிக்காரர்கள் என்று ஒரு மாயை நிலவுகிறது.

லண்டனுக்கு வந்திருந்தார், அந்த அமெரிக்கச் சுற்றுலாப்பயணி. ஓர் இரவு... யாரும் கவனிக்கமாட்டார்கள் என்று நினைத்து இருளான ஒரு சந்தியில் சிறுநீர் கழிக்கத் தயாரானார். பின்னாலிருந்து யாரோ தோளில் தட்டினார்கள். திரும்பிப்பார்த்தால், லண்டன் பொலிஸ்.

“லண்டனில்வீதிகளில் அசிங்கம் செய்தால் அபராதம் விதிக்கப்படும்” என்றார். அந்த அதிகாரி.

“மன்னிக்கவும் எனக்கு அவசரம்...”

“என்னுடன் வாருங்கள்” என்று பொலிஸ்காரர் அவரை வேறுவீதிக்கு அழைத்துச் சென்றார். ஒரு பெரிய கதவைத்திறந்து விட்டார். நிலவொளியில் மிக அற்புதமான தோட்டத்தில் தான் நின்றிருப்பதை அமெரிக்கர் கவனித்தார்.

பொலிஸ்காரரே அனுமதித்ததால், அமெரிக்கர் தன்வேலையை முடித்துக் கொண்டார்.

பின்னர் “இதைத்தான் ஆங்கிலேயரின் பெருந்தன்மை என்கிறார்களோ?” என்றார் நன்றியுடன்.

“இல்லை. இதை அமெரிக்கத்தூதரகம் என்பார்கள்” என்றார் பொலிஸ்காரர். தனக்குப் பிடிக்காத எதையும் இப்படிக்காழ்ப்புடன் அணுகுவதா புத்திசாலித்தனம்? ஒன்றை நிர்மாணிக்கும் போது சிலவிடயங்கள் திட்டமிட்டபடி நடக்கும். சில விடயங்கள் மாறாக நடந்துவிடும். நிர்மாணிப்பவர்கள் புத்திசாலிகளாகக் காணப்படுகிறார்களோ, இல்லையோ அந்தத் தவறுகளை சுட்டிக்காட்டுபவர்கள் உடனடியாக புத்திசாலிகளாகக் கொண்டாடப்படுகிறார்கள். படைப்பாளிகளைவிட விமர்சகர்கள் விரைவில் புகழ்பெறுவது இதனால்தான்.

**“அதற்காக எது சொன்னாலும் கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொள்ளமுடியுமா? கேள்வி கேட்பது தவறா?”**

கேள்வி என்பது தவறே இல்லை. ஆனால் சற்றும் யோசனையின்றி மறுப்பது எப்படி புத்திசாலித்தனமாகும்? ராம், ஷ்யாம் என இரண்டு நண்பர்கள் பள்ளத்தாக்கில் வசித்து வந்தார்கள். ராம் எதையும் எதிர்ப்பவன். ஷ்யாம் சமாதானமாகப் பேசுகிறவன்.

ஒரு முறை பக்கத்து மலையுச்சியில் என்ன இருக்கிறது என்று பார்த்துவர இருவரும் தங்கள் குதிரைகளில் பயணமானார்கள். கடினமான மலையேற்றம். மலையுச்சிக்கு போய்சேர்ந்தபோது முற்றிலும் இருட்டி விட்டது.

திடீரென்று இருளில் ஒரு குரல் கேட்டது... “கீழே கிடக்கும் கற்களை வேண்டியமட்டும் எடுத்துச் செல்லுங்கள் மறுமுறை வந்தால் கிடையாது!”

ராம் கோபமானான். “இதென்ன வெட்டி வேலை? இந்த வீணாய்ப்போன கற்களை நான் ஏன் சுமந்து செல்லவேண்டும்?”

ஆனால், ஷ்யாம் தன் பை நிறைய கற்களை நிரப்பி குதிரையில் ஏற்றிக் கொண்டான். அவர்கள்மீண்டும் பள்ளத்தாக்குக்கு இறங்கி வந்து சேர்ந்தபோது விடியல் சூரியனின் கிரணங்கள் அந்தக்கற்களில் பட்டு மின்னலடித்தன. ஆம்... அவை வெறும் கற்கள் அல்ல விலைமதிப்பு மிக்க வைரங்கள். ஆலோசனையற்ற தன் எதிர்ப்புக்கு கிடைத்த ‘பரிசை’ புரிந்து கொண்டான் ராம்.

எல்லாவற்றையும் கண்மூடித்தனமாக எதிர்க்கும்போது வைரக்கற்களைக் கவனிக்காமல் தவறவிட்டுவிடக்கூடும்.

ஒரு செடியை பல வருடங்கள் நீரூற்றி வளர்ப்பவர்களைச் சுற்றி கூட்டம் சேர்வதில்லை. மரமாக வளர்ந்து நிற்கும்போது, அதைவெட்டி சாய்ப்பவர்களை வேடிக்கைபார்க்கவே கூட்டம் கூடுகிறது. எதிர்ப்பதும், அழிப்பதும், தகர்ப்பதும் உணர்ச்சிகரமானவையாக இருப்பதால் தான் சினிமாக்களில் அடுத்தவரைத் தாக்கி கீழே தள்ளும்கதாநாயகர்கள் பெரிதும் இரசிக்கப்படுகிறார்கள். பரபரப்பான விமர்சனம் என்பது எதையாவது தாக்கி கீழே சாய்ப்பதிலேயே குறியாக இருக்கிறது. அக்கபூர்வமான கருத்துக்களைவிட எதிர்மறையானகருத்துக்கள்பிரபலமாவதும் இதனால்தான்!

**“அப்படிப்பார்த்தால், உங்களுடைய பல கருத்துக்கள்கூட பொதுவான நம்பிக்கைக்கு எதிராகவிருக்கின்றனவே? உங்களையும் ஒரு கிளர்ச்சியாளராக கருதலாமே?”**

என்னுடைய சில செயல்கள் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு கிளர்ச்சியாளனின் செயல்கள் போலத்தோற்றமளிக்கலாமே தவிர நான் எதிர்ப்பாளனாகவோ, கலகக்காரனாகவோ மனதளவில் செயற்படுவதில்லை.

உலகத்துடன் எல்லாவற்றிலும் இணங்கிப்போகவேண்டும் என்பதே என்ஆசை. ஆனால் அதற்கேற்ற பக்குவத்துடன் உலகம் இன்னும் அமையவில்லை. அவ்வளவுதான்!

ஓங்கித்தாக்கும் சுத்தியல் அழிக்க வல்லது; மிருதுவாகச்செலுத்தப்படும் உளிதான் செதுக்கவல்லது!

கூழாங்கற்களைப் பற்றி இரவீந்திரநாத் தாகூர் ஒரு முறை சொன்னார்... கற்களை இப்படி அழகாக வடிவமைத்துத் தந்தவை ஆக்ரோஷமான சுத்தியல்கள் அல்ல; அவற்றை மிருதுவாக உருட்டித் தந்த மென்னையான தண்ணீர்தான்!

பக்குவமான சிந்தனைகள் பெருகி விட்டால், காரணமற்ற எதிர்ப்பு என்ற கொள்கை அர்த்தமற்றதாகத்தோன்றி விடும்.

காரணங்களை மட்டுமே வைத்துக் கணக்கிட்டால் உண்மைபுரியாது. முழுமையான விழிப்புணர்வுடன் உயிர்ச்சக்தியின் துணையுடன் எதையும் அலசி ஆராய்ந்து கவனிக்க ஆரம்பித்தால் உங்கள் கருத்துக்கள் ஆழம் மிக்கதாகவும் அர்த்தம் கொண்டதாகவும் மலரத்தொடங்கும்.

“இதைமட்டும் சொல்லுங்கள்... கடவுள் எதிர்ப்பு என்பது பாவமா, இல்லையா?”

ஏதாவதொன்றை நீங்கள் பாவம் என்று முத்திரை குத்தினால் அந்தச்செயல்தான் பாவம். பாவம் செய்தவர்என்று யாரையாவது குறிப்பிட்டால் அதுதான் பரிகாரமற்ற பாவம்; அமுதத்தை ருசிக்கத் தெரியாமல், விஷத்தைக்கிளறிக்கொண்டு இருப்பதை விட்டுவிடுங்கள்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலக்கியப்படைப்பு படைப்பாளியின் பிம்பத்தை உணர்த்துமா? 01

**“கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”**

எழுத்தாளன் என்பவன் மனித குலத்தின் மனச்சாட்சி என்ற பொன்மொழி மாறி, அவன்தன் சமுதாயத்தின் பிணசாட்சியாக எல்லாவற்றையும் தயக்கமான குரலில் முணுமுணுத்துக் கொண்டிருப்பவனாக இன்று செயல்படவேண்டியிருக்கிறது.

பொதுவாக நமக்கு எழுத்தாளர்களைப் பற்றிய அறிமுகம் என்பது அவர்களுடைய புத்தகங்கள்தான். நாம் வாசிக்கும் புத்தகங்கள் மூலம் விபரிக்கப்படும் கதாபாத்திரங்களின் சாயல்களில் ஏதாவதொன்றை அந்த எழுத்தாளருடைய ஆளுமையுடன் சம்பந்தப்படுத்திக் கெள்கிறோம். ஆனால் நடை முறையில் அதுவேறாக இருக்கிறது.

இந்தசமயம் எனக்கு ஒரு பழைய சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது.1971 என்று நினைக்கிறேன். திருச்சியில் ஒரு கவிதை கூட்டத்துக்காக நான் அழைக்கப்பட்டிருந்தேன். ரயிலில் இருந்து இறங்கியவுடன் வரவேற்க வந்திருந்தவர்களில் ஒருவர்

“ஏன் வைத்தீஸ்வரன் வரவில்லையா?” என்று என்னைப் பார்த்துக் கேட்டார். “நான் தா்ன் அது ”என்றேன்.

எனக்கு அப்போது 35 வயது இருக்கும்.

“என்னசேர்... நீங்களா வைத்தீஸ்வரன்?”

“உங்கள் கவிதைகளை படித்தபோது வயதான முதியவராக நீண்ட தாடியும் காவி ஜிப்பாவும் போட்டுக்கொண்டு கைத்தடியுடன் நிற்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். நீங்கள், உங்கள் கவிதையின் முதிர்ச்சிக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லாத ஆளாக இருக்கிறீர்களே?” என்று சொல்லிச் சிரித்தார். ஒரு படைப்பு நம்மனதுக்குள் அதன் ஆசிரியரின் பிம்பத்தை உருவாக்கி விடுகிறது... ஒரு படைப்பை வாசிக்கும்போது அதை எழுதிய ஆசிரியர் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானத்துக்கு வந்துவிடுகிறோம்.

ஒரு கடோத்கஜனையும் குத்துச்சண்டை வீரர்களையும் கதாபாத்திரங்களாகக் கொண்டு எழுதும் ஆசிரியர் உண்மையில் ஒரு காற்றடித்தால் விழுந்துவிடக்கூடும் என்று நமக்கு சகஜமாகத் தோன்றுவதில்லை.

அந்த வகையில் ஒரு விதிவிலக்காக டால்ஸ்டாயும் தாகூரும் அவர்கள் படைப்புக்கு பொருத்தமான உருவத்தோடு சரியாகப் பொருந்தி விடுகிறார்கள். புதுக்கவிதையின் பிதாமகர் என்று பொதுவாக சொல்லுகிற ந.பிச்சமூர்த்தியையும் இந்த வரிசையில் சேர்க்கலாம். ஒரு வேளை இன்றைய எழுத்தாளர் சந்திப்பின் நோக்கம்கூட பொதுவாக எழுத்தாளர்களைப்பற்றி நாம் இதுவரை கொண்டிருக்கும் மாறுபட்ட அபிப்பிராயங்களை அழித்து ஒருவரை ஒருவர் நிஜமாகக் கண்டு தெரிந்துகொள்ளும் ஒரு நல் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ளும் முயற்சிதான் என்று நான் நம்புகிறேன்.

**வைத்தீஸ்வரன்-தமிழ்நாடு**

கடந்த ஒரு நூற்றாண்டாக தமிழர்கள் சிங்கப்பூர், மலேசியா, பர்மா, இந்தோனிசியா முதலிய நாடுகளில் வணிக நிமித்தமாக குடியேறி இன்று ஒரு வேரூன்றிய சமூகமாக வளர்ந்திருப்பதை நாம் அறிவோம். மேலும் இந்த நூற்றாண்டில் நேர்ந்த ஒரு சரித்திரப் போக்கின் காரணமாக உலகத்தின் பல நாடுகளிலும் நமது அடையாளங்களையும் நமது குரலையும் மொழியையும் இப்போது கண்டு, கேட்க முடிகிறது. நம்பமுடியாத அளவுக்கு உலகத்தைப்பற்றிய கற்பனை உருவம் சுருங்கி நம் கைக்கெட்டும் தூரத்தில் எல்லா நாடுகளும் அருகாமையில் இருப்பதான அன்நியோன்யம் இந்த நூற்றாண்டில் சாத்தியமாகி இருக்கிறது. இந்தத்தொடர்பில் என் கவிதை ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

அதன் தலைப்பு “நட்புக்கு முகமில்லை”

இன்று வரை
அவன் முகத்தைப் பார்த்ததில்லை
பல வருடங்களாக நாங்களிருவரும்
நண்பர்கள்
நண்பனாய் இருப்பதற்கு
முகம் தேவையில்லையென
முதலில் நம்பமுடியாமலிருந்தது
உண்மையாக இது காலத்தால்
நிர்ப்பந்தமாகும் வரை
இன்று
கண்டம் கண்டமாகப் பிரிந்து
வாழும் நாங்கள் ஏதோ
நேரில்கண்டதுபோல்
எப்படியோ பழகிவிட்டோம்
ஒரு விதமாய்
நட்புக்கு முகம் முக்கியமில்லையென்று
நடப்பில் இன்று புரிந்துவிட்டது.
எனக்குள் அவன்முகமும்
அவனுக்குள் என்முகமும்
நிஜமான நிழற்படம்போல்
நெஞ்சில் இன்று தெளிவாகிவிட்டது.
நாட்டுக்கு நாடு
நாங்கள் கூப்பிட்டுக்கொள்ளும்
குரல்களால்
எங்கள் கற்பனைமுகத்துக்குப்
பேச்சு வந்துவிடுகிறது.
பரஸ்பர பாசமும்பிரிவும்
சோகமும் சிரிப்பும்
அன்பும் அடக்கமுடியாத கண்ணீரும்
அவரவர் மனதிலுள்ள முகங்களில்
அடிக்கடி தழு தழுக்கிறது.
வாழ்வின் அவசர ஆத்திரங்களும்
அரசியல் சூறாவளிப் பேய்காற்றும்
பிறந்த மக்களை
ஊர்விட்டு ஊர்பெயர்த்து
உலக மூலைகளில்
உதறி இரைக்கும்
இக்காலசோகப்பிரளயத்தில்
இப்படித்தான் நண்பர்கள்
முகம்பார்க்காமல்இருக்கவேண்டுமென
முடிந்த விதியாகிவிட்டது.
நட்புக்கு எதற்கு முகம் என்று
நாங்கள் நினைக்கப் பழகிவிட்டோம்
முகமொரு பொருட்டில்லாமல்
இன்று உலகமெங்கும் நண்பர்கள்
எனக்கு நிறைந்துவிட்டார்கள்.
மனம்நிறைய புதுப்புது முகங்களுடன்
பரிச்சயமானஉலகம்
எனக்குள் சுழலுகிறது அன்பின்
விசையுடன்.
எனக்குள் அருளும் ஆனந்தமும்
பெய்து பெருகும்
இறைவனின் முகத்தை
எனக்கென்ன
அடையாளமா தெரிகிறது...?

(தொடரும்)

# க.பொ.த உயர்தரப்பரீட்சை - 2011 (புதிய பாடத்திட்டம்) நேர அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| | ஓகஸ்ட் 08 திங்கட்கிழமை | | |
| 1 | 08.30 – 11.30<br>10 இணைந்த கணிதம் I | 08.30 – 10.30<br>78 அரபு I | 12.30 – 14.30<br>09 உயிரியல் I, 21 பொருளியல் I |
| | ஓகஸ்ட் 09 செவ்வாய்க்கிழமை | | |
| 2 | 08.30 – 10.30<br>52 நாட்டியம்(தேசிய) I ,53 நாட்டியம் (பரதம்) I<br>54 கீழைத்தேயம் சங்கீதம் I<br>55 கர்நாடகம் சங்கீதம் I<br>56 மேலைத்தேயம் சங்கீதம் I | | 12.30 – 15.30<br>09 உயிரியல் II<br>21 பொருளியல் II |
| | ஓகஸ்ட் 10 புதன்கிழமை | | |
| 3 | 08.30 – 11.30<br>10 இணைந்த கணிதம் II, 52 நாட்டியம் (தேசிய) II<br>53 நாட்டியம் (பரதம்) II | | 12.30 – 14.30<br>08 விவசாய விஞ்ஞானம் I |
| | ஓகஸ்ட் 11 வியாழக்கிழமை | | |
| 4 | 08.30 – 10.30<br>33 கணக்கீடு I<br>51 சித்திரக்கலை I | 08.30 – 11.30<br>51 சித்திரக்கலை I | 12.30 – 15.30<br>54 கீழைத்தேயம் சங்கீதம் II<br>55 கர்நாடகம் சங்கீதம் II<br>56 மேலைத்தேயம் சங்கீதம் II |
| | ஓகஸ்ட் 12 வெள்ளிக்கிழமை | | |
| 5 | 08.30 – 10.30<br>01 பௌதீகவியல் I | 08.30 – 11.30<br>33 கணக்கீடு II<br>51 சித்திரக்கலை II | 14.00 – 17.00<br>08 விவசாய விஞ்ஞானம் II |
| | ஓகஸ்ட் 15 திங்கட்கிழமை | | |
| 6 | 08.30 – 11.30<br>01 பௌதீகவியல் II ,51 சித்திரக்கலை III | | 12.30 – 14.30<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் I |
| | ஓகஸ்ட் 16 செவ்வாய்க்கிழமை | | |
| 7 | 08.30 – 11.30<br>72 தமிழ் I | | 12.30 – 14.30<br>28 மனைப் பொருளியல் I |
| | ஓகஸ்ட் 17 புதன்கிழமை | | |
| 8 | 08.30 – 11.30<br>72 தமிழ் II | | 12.30 – 15.30<br>28 மனைப் பொருளியல் II |
| | ஓகஸ்ட் 18 வியாழக்கிழமை | | |
| 9 | 08.30 – 10.30<br>02 இரசாயனவியல் I, 75 சமஸ்கிருதம் I | | 12.30 – 15.30<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் II |
| | ஓகஸ்ட் 19 வெள்ளிக்கிழமை | | |
| 10 | 08.30 – 11.30<br>02 இரசாயனவியல் II ,75 சமஸ்கிருதம் II | | 14.00 – 16.00<br>32 வணிகக்கல்வி I |
| | ஓகஸ்ட் 20 சனிக்கிழமை | | |
| 11 | 08.30 – 11.30<br>13 பொது ஆங்கிலம் I | | 12.30 – 15.00<br>13 பொது ஆங்கிலம் II |
| | ஓகஸ்ட் 22 திங்கட்கிழமை | | |
| 12 | 08.30 – 10.30<br>14 குடிசார் தொழில்நுட்பவியல் I, 15 பொறிமுறை தொழில்நுட்பவியல் I<br>16 மின்இலத்திரன், தகவல் தொழில் நுட்பவியல் I, 17 உணவுத் தொழில்நுட்பவியல் I<br>18 விவசாயத் தொழில் நுட்பவியல் I , 19 உயிர் வளத் தொழில்நுட்பவியல் I<br>20 தகவல் தொடர்பாடல் ஊடகக்கற்கை I , 29 தொடர்பாடல் ஊடகக்கற்கை I | | |
| | ஓகஸ்ட் 23 செவ்வாய்க்கிழமை | | |
| 13 | 08.30 – 11.30<br>73 ஆங்கிலம் I | | 12.30–15.30<br>25 இலங்கை வரலாறு I |
| | ஓகஸ்ட் 24 புதன்கிழமை | | |
| 14 | 08.30 – 10.30<br>46 இந்து நாகரிகம் I<br>47 இஸ்லாமிய நாகரிகம் I<br>49 கிறிஸ்தவ நாகரிகம் I | | 12.30 – 15.30<br>32 வணிகக் கல்வி II, பகுதி I, II |
| | ஓகஸ்ட் 25 வியாழக்கிழமை | | |
| 15 | 08.30 – 11.30<br>14 குடிசார் தொழில்நுட்பவியல் II<br>15 பொறிமுறை தொழில்நுட்பவியல் II<br>16 மின்னிலத்திரன் தகவல்தொழில் நுட்பவியல் II<br>17 உணவுத் தொழில் நுட்பவியல் II<br>18 விவசாய தொழில் நுட்பவியல் II<br>19 உயிர்வள தொழில் நுட்பவியல் II<br>20 தகவல் தொடர்பாடல் ஊடகக் கற்கை II<br>29 தொடர்பாடல் ஊடகக் கற்கை II | | 12.30 – 14.30<br>22 புவியியல் I |
| | ஓகஸ்ட் 26 வெள்ளிக்கிழமை | | |
| 16 | 08.30 – 11.30<br>07 கணிதம் I , 11 உயர் கணிதம் I | | 14.00 – 17.00<br>22 புவியியல் II, I |
| | ஓகஸ்ட் 27 சனிக்கிழமை | | |
| 17 | 08.30 – 10.30<br>31 வணிகப்புள்ளி விபரவியல் I , | | 08.30 – 11.30<br>58நாடகமும் அரங்கியலும்( தமிழ்) I ,<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) I |
| | ஓகஸ்ட் 29 திங்கட்கிழமை | | |
| 18 | 08.30 – 11.30<br>07 கணிதம் II<br>11 உயர் கணிதம் II | | 12.30 – 15.30<br>46 இந்துநாகரிகம் II<br>47 இஸ்லாமிய நாகரிகம் II<br>49 கிறிஸ்தவ நாகரிகம் II |
| | ஓகஸ்ட் 30 செவ்வாய்க்கிழமை | | |
| 19 | 08.30 – 10.30<br>23 அரசியல் மூலதத்துவங்கள் I | | 12.30 – 15:30<br>73 ஆங்கிலம் II |
| | செப்டெம்பர் 01 வியாழக்கிழமை | | |
| 20 | 08.30 – 11.30<br>23 அரசியல் மூலதத்துவங்கள் I,II | | 12.30 – 15.30<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) II |
| | செப்டெம்பர் 02 வெள்ளிக்கிழமை | | |
| 21 | 08.30 – 11.30<br>31 வணிகப் புள்ளிவிபரவியல் II | | 14.00 – 16.00<br>42 இந்துசமயம் I , 43 கிறிஸ்தவம் I<br>44 இஸ்லாம் I |
| | செப்டெம்பர் 03 சனிக்கிழமை | | |
| 22 | 08.30 – 11.00<br>12 பொதுச்சாதாரண பரீட்சை | | 12.30 – 15.00<br>42 இந்து சமயம் II , 43 கிறிஸ்தவம் II<br>44 இஸ்லாம் II |

குறிப்பு:- க.பொ.த உயர்தர பரீட்சை –2011 பழைய பாடத்திட்டத்திற்கான நேர அட்டவணை நாளை வெளியாகும்.

# பொதுமலசல கூடத்தை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட மல்லாவி நகரப் பகுதியில் பொது மலசல கூடங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை.

இதனால் பல்வேறு தேவைகளின் பொருட்டு மல்லாவிக்கு வரும் துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட ஆயிரக்கணக்கான பொது மக்களும் தூர இடங்களிலிருந்து தமது தேவைகளை நிறைவு செய்யவரும் பேருந்து பயணிகளும் மற்றும் நகர வர்த்தகர்களும் பல்வேறு அசௌகரிங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பலரிடமும் முறையீடு செய்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது விடயத்தில் துணுக்காய் பிரதேச சபை உரிய அக்கறை எடுத்து பொது மலசல கூடத்தை அமைத்து தருமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(ஸ்ரீ-15)

# ஜோர்தானில் பணிப்பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதாக எவரும் முறையிடவில்லை

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஜோர்தானில் தொழிற்சாலையொன்றில் இலங்கைப் பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜோர்தானிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் இலங்கையரான முகாமையாளர் ஒருவரினால் அங்கு பணியாற்றும் இலங்கைப் பெண்கள் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதாக உலக தொழிலாளர் மற்றும் மனித உரிமைகளுக்கான நிறுவகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கேட்டபோதே அவ்வமைச்சு இவ்வாறு தெரிவித்துள்ளது. ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதரகத்துடனும் தொழிலாளர் மற்றும் நலன்புரி அதிகாரிகளுடனும் தாம் தொடர்பு கொண்டதாகவும் இவ்வாறான புகார்கள் கிடைக்கவில்லை என அவர்கள் உறுதிப்படுத்தியதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

குற்றச்சாட்டுகளை நாம் மிக பாரதூர மாக கருதுகிறோம். உலக தொழிலாளர் மற்றும் மனித உரிமைகளுக்கான நிறுவகத்திற்கு இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமைச்சு கடிதம் அனுப்பும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# மீள் குடியேற்றப்பட்ட இடங்களில் காணித்துப்புரவுப் பணிகளுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த 20 வருடங்களாக இடம் பெயர்ந்திருந்த வித்தபுர கிராம மக்கள் கடந்த வருடம் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதிக்கு பின்னர் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டனர்.

இப்பகுதியிலுள்ள வீதிகள் துப்பரவு செய்வதற்கும் மண் அணைகள் அகற்றுவதற்கும் மென என்றிப் நிறுவனத்தால் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் ஊடாக 15 இலட்சத்து 42 ஆயிரத்து 998 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குடியிருப்பாளர்களின் காணிகள் துப்பரவு பணிக்கென 6 இலட்சத்து 77 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மீதி காணி வேலைதுப்பரவுபணிக்கென 5 இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே தமது காணிகளை துப்புரவு செய்து பெற்றுக் கொள்ளாதவர்கள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிராம சேவகர் அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

(ஸ்ரீ-2)

# தவறுக்கு வருந்தும் பழக்கம் குரங்குகளுக்கும் உண்டு

செய்த தவறுக்கு வருந்துவது மனிதர்களிடம் உள்ள உணர்வுகளில் முக்கியமானது. இந்தக் குணம் மனிதர்களிடம் மட்டுமே இருப்பதாக விஞ்ஞானிகள் கருதி வந்தனர். ஆனால் ஆசிய வகைக் குரங்குகளிடமும் இந்தக் குணம் இருப்பதை தற்போது விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அமெரிக்காவின் கனக்டிகட் மாகாணத்தில் உள்ள நியூஹேவன் நகரில் உள்ள யேல் மருத்துவ கல்லூரியைச் சேர்ந்த டாயோல் லீ மற்றும் ஹிரோஷி அபே என்ற இரு பேராசிரியர்கள் விலங்குகளைப் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். தங்கள் ஆய்வின் ஒரு கட்டமாக கணினியில் விளையாடக் கூடிய குழந்தைகளுக்கான விளையாட்டை குரங்குகளுக்கு சொல்லி கொடுத்தனர். அதில் வெற்றி பெற்ற குரங்குகளுக்கு அதிக ளவில் பழச்சாறு பரிசாக வழங்கப்பட்டது.

ஆய்வாளரின் துணையோடு தான் சில குரங்குகள் விளையாட நேரிடுகிறது என்றால் அந்த குரங்குகளுக்குச் சிறிய பரிசு அளிக்கப்பட்டது. விளையாட்டில் தோற்ற குரங்குகளுக்கு எதுவும் வழங்கப்படவில்லை. தங்களுக்கு எதுவும் வழங்கப்படாததற்கு தாங்கள் சரியாக விளையாடாததே காரணம் என்பதை உணர்ந்து கொண்ட அந்தக் குரங்குகள் மிகவும் கவலை அடைந்தன.

அடுத்த முறை விளையாடும் போது வெற்றி பெற்ற குரங்குகள் விளையாட்டில் என்ன விதத்தைக் கையாண்டனவோ அதையே தாங்களும் கையாள முயன்றன. இதன் மூலம் தங்களின் பழைய முயற்சியால் விளைந்த விளைவுகளை சீர்தூக்கி ஆராய்ந்து அந்தத் தவறில் இருந்து விடுபட அவை விரும்புகின்றன என்பது தெரியவந்தது.

வாழ்நாளில் தாங்கள் செய்த ஏதாவது ஒரு தவறுக்காக வருந்தி அதன் மூலம் மூளையில் பல்வேறு நோய்கள் ஏற்பட்டு சிலர் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் மூளை நோய்கள் பற்றிய தீர்வுக்கு இந்த ஆய்வு பயன்படுத்தப்படும் என்று பேராசிரியர்கள் இருவரும் தெரிவித்தனர்.

(ஸ்ரீ)

# இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே!

## இதைப்போல் வேறெங்கும் கண்டதில்லை

### லண்டனில் அருந்ததிராய் தெரிவிப்பு



இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே எனவும் அங்கு இடம்பெற்ற இக்கொடுமையைப் போல் ஒன்றை தான் வேறெங்கும் கண்டதில்லை எனவும் பிரபல எழுத்தாளரான அருந்ததிராய் லண்டனில் நடைபெற்ற தமிழர்களுடனான சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் லண்டன் சவுத்ஹோல் பகுதியில் நடைபெற்ற இச்சந்திப்பில் லண்டன் வாழ் புலம்பெயர் தமிழர்களும் சிங்கள ஊடகவியலாளர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் நடந்த கொடிய போரைப் பற்றி எங்களுக்குத் தெரியும். வைத்தியசாலைகள் மீது குண்டுவீச்சு, எறிகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டது. குறுகிய திறந்தவெளி நிலப் பரப்பை போர் அற்ற பாதுகாப்பு பிரதேசமாக அறிவித்து அப்பகுதிகளுக்குள் மக்களை வரச்சொல்லி பின் அப்பகுதிக்குள் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதும் தெரியும்.

அத்துடன் சர்வதேச நாடுகள் தமது பொருளாதார மற்றும் இராணுவ நலன்சார்ந்த தந்திரோபாய ரீதியில் இலங்கையில் இவ்வாறான கொடிய போருக்கும் அதனூடான இனப்படுகொலைக்கும் அனுமதித்துள்ளதாகவும் இலங்கையில் நடைபெற்றதை முன்மாதிரியாக பின்பற்றி பிராந்திய நாடுகளும் செயற்பட வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை சொல்லிக் கொண்டு அரசியலில் தம்மை நிலைநிறுத்திக் கொண்ட தமிழக தலைவர்களை தான் நன்கு அறிந்துள்ளதாகவும் அதேவேளை தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் தங்கியுள்ள முகாம்களுக்கு தான் சென்ற போது அங்கு அவர்கள் மிருகங்களைப் போல் நடத்தப்படுவதை கண்டதாகவும் இந்த விடயத் தில் தமிழக அரசியல்வாதிகள் அக்கறை கொள்ளவில்லை எனவும் அருந்ததிராய் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு திருவருள் மிகு குருநாத சுவாமி கோயில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்ட அலங்கார உற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஷண்முகர் அபிஷேகம், ஷண்முகார்ச்சனை, அருள்நடன பவனி, தண்டிகைத் திருவிழா இடம்பெற்று மறுநாள் புதன்கிழமை காலை திருவூஞ்சல், தீர்த்தவாரி ஆகியன நடைபெறும். (ஸ்ரீ-2)

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரை ஒளிப்பதிவு செய்ய அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வோரை வீடியோ ஒளிப்பதிவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் அடிப்படையில் நாடு முழுவதும் நடைபெறும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அதில் பங்குபற்றுவோர் எதிர்வரும் காலங்களில் பொலிஸ் திணைக்கள உதவியுடன் வீடியோ ஒளிப்பதிவு செய்யப்படவுள்ளனர்.

அதற்கென பொலிஸ் திணைக்களத்தில் விசேட வீடியோ ஒளிப்பதிவாளர்கள் அணியொன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.


கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களின் எதிரொலியாகவே அரசாங்கம் பிரஸ்தாப தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதேநேரம் கட்டுநாயக்கவில் பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்டவர்கள் சிலர் சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பெரும்பாலும் அவர்களுக்கெதிராக எதிர்வரும் நாட்களில் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஸ்ரீ-2)

## அவசரகாலச் சட்டத்தை நீக்கும் நோக்கம் அரசாங்கத்திடம் அறவே இல்லை

### விஜித ஹேரத் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தைத் தளர்த்தப் போவதாகக்கூறி அரசாங்கம் பொதுமக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வருவதாக ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் பெரும்பாலான ஊடகங்கள் வாயிலாக அவசரகாலச்சட்டத்தை தளர்த்தப் போவதாக அரசாங்கம் மேற்கொள்ளும் பிரசாரங்களில் எள்ளளவும் உண்மையில்லை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அவசரகாலச் சட்ட விதிகளைத் தளர்த்தப்போவதாக ஊடகங்கள் வாயிலாக அரசாங்கம் பெருமெடுப்பில் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தது. அமைச்சரவை முடிவுகள் அறிவிக்கும் ஊடகவியலாளர் மகாநாடொன்றின் போதும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அதுபற்றிப் பிரஸ்தாபித்திருந்தார்.

அதுமாத்திமின்றி சட்டமா அதிபரே கூட அவசரகாலச் சட்டத்தை தளர்த்துவது குறித்து ஊடகமொன்றில் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆனாலும் அரசாங்கம் அவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஒருபுறத்தில் பொதுமக்களை ஏமாற்றிக்கொண்டு மறுபுறத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாக அவசரகாலச் சட்டத்தை நீடித்துக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் அவசரகாலச் சட்டத்தை நீக்கும் நோக்கம் அரசாங்கத்திடம் அடியோடு இல்லை என்பதையே அது புலப்படுத்துகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கையை போர்க்குற்றவாளியாக உறுதிப்படுத்த இரகசிய சூழ்ச்சி

### சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் போர்க்குற்றங்களை செய்துள்ளதாகக் கூறி 30 சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் இரண்டு ஊடக நிறுவனங்களும் சர்வதேச புத்திஜீவிகள் எனக் கூறும் 10 பேரும் ஜெனீவா மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் இலங்கையைப் போர்க் குற்றவாளியென உறுதிப்படுத்துவதற்காக மிகவும் இரகசியமான சூழ்ச்சியொன்றை ஆரம்பித்திருப்பதாக அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பான இரகசிய பேச்சுவார்த்தையொன்று ஜெனீவாவிலுள்ள ஐ.நா. தலைமையக அறையொன்றில் நடத்தப்பட்டுள்ளதாக அவ் ஊடகம் கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

## பல்கலை. மாணவர்களின் முதலாம் கட்ட தலைமைத்துவ பயிற்சி நிறைவு

பல்கலைக்கழக மாணவர்களுக்கான முதலாம் கட்ட தலைமைத்துவப் பயிற்சி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக உயர் கல்வி அமைச்சரின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமான 3 வாரகால தலைமைத்துவப் பயிற்சி வெற்றிகரமாக நடைபெற்று நேற்று முன்தினம் நிறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி மேலும் இரண்டு வாரங்கள் நீடிக்கவுள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சரின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ண குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தலைமைத்துவப் பயிற்சியின் போது அதிகளவிலான மாணவர்களையும் இணைத்துக்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தலைமைத்துவப் பயிற்சி சிறந்த முறையில் அமையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ஸ்ரீ-2)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை 12 மணிக்கு தென்மராட்சி வலயக் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த வலயத்தைச் சேர்ந்த அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (2-29)

## புலம்பெயர் நாடுகளில் அரச தரப்பு சாட்சியாக கே.பி. மாற்றம் பெறுவார்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முன்னாள் பிரமுகர் குமரன் பத்மநாதனை தேவைப்படின் தாங் கள் அரச சாட்சியாகப் பயன்படுத்தப் போவ தாக அரசு தெரிவித்துள்ளது.

கே.பி.குறித்து ஆங்கில ஊடகமொன்றிற்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, விடுதலைப்புலிகளினால் புலம்பெயர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு அரசதரப்பு சாட்சியாக கே.பி. மாற்றப்படுவார் எனத் தெரி வித்துள்ளார்.

மேற்குலகின் பரிந்துரையால் குறிப்பாக நோர்வே மற்றும் அமெரிக்கா கே.பி. இலங்கையில் சுயாதீனமாக நடமாட விடப்பட்டுள்ளார் என்ற போதும் அவரால் நடத்தப்படும் www.nerdo.lk என்ற பொது அமைப்பு எந்த அளவில் சுயாதீனத்தைக் கொண்டுள்ளது என்பது இன்னமும் புலப்படாத ஒரு உண்மையாக இருந்து வருகிறது. பல பெரிய உண்மைகளைக் கொண்டுவரும் ஒரு நடவடிக்கையாகவே இது அமையும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

ஒன்றும் பேசாதிருப்பது நல்லது. எப்போது? பேசியும் நடக்க முடியாதபோது.
*- கி.ஆ.பெ.விசுவநாதம்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எங்கள் பற்றிய பேச்சுக்கள் எங்களுக்கே இரகசியமா?

எம்பற்றிய-எம் இனம் பற்றிய விவகாரம் தான் பேசுகிறார்கள். ஆனால் அது பற்றி எமக்கு எதுவுமே தெரியாது.

இந்த நிலையில்தான் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் அமைந்துள்ளன.

ஈழத்தமிழர்களின் விவகாரம் குறித்து இரு வகைப் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

அதில் ஒன்று இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடன் நடத்தும் பேச்சு. மற்றையது இலங்கை அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்தும் பேச்சுவார்த்தை.

இதில் இரண்டு பேச்சுவார்த்தைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்பு பட்டவையாயினும் பேசும் தரப்பில் இருக்கக் கூடிய அதிகாரத்தன்மை வேறுபட்டுள்ளதைக் காணமுடியும்.

அதாவது இந்தியா நடத்தும் பேச்சுவார்த்தையில் அழுத்தம் கொடுக்கும் அதிகாரம் உள்ள தரப்பாக அந்த நாடு இருக்கிறது..

அந்த நாட்டின் அழுத்தத்திற்கு செவிசாய்க்கின்ற அல்லது அந்த அழுத்தத்தை சமாளிக்க வேண்டிய கட்டத்தில் இலங்கை அரசு இருப்பதை மறுக்க முடியாது.

ஆனால் இலங்கை அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்துகின்ற பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்கக் கூடிய அதிகாரம் கொண்ட அமைப்பாக இல்லை.

மாறாக இலங்கை அரசு கூறுவதைக் கேட்கும் தகைமை மட்டுமே அந்த தரப்பிற்கு உண்டு. தமிழர் தரப்பின் ஆயுத பலம் அழிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இடத்தில் யார் இருந்தாலும், அதே நிலை என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

ஆக, இலங்கை அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்துகின்ற பேச்சுவார்த்தையில் தமிழர் தரப்பு பலம் பெறுவதாக இருந்தால், இலங்கையுடனான பேச்சுவார்த்தையில் இந்தியா உக்கிரமாக இருக்க வேண்டும்.

இந்தியாவின் உக்கிரம் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வை விரைவுபடுத்தவும் தீர்வை கனதியாக்கவும் உதவும் என்பது பொதுவான கருத்து.

இங்கு இலங்கை அரசுடன் இந்தியா உக்கிரமாக நடந்து கொள்கின்றதா? இல்லையா? என்பதை அறிவதற்கு அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்துகின்ற பேச்சுவார்த்தையின் போது அரசு முன்வைக்கின்ற விடயங்களே உதவும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசு-இந்திய பேச்சுக்களும், இலங்கை அரசு-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளிலும் என்ன பேசப்பட்டன என்று எவருமே வெளிப்படுத்துவதில்லை.

எங்களைப்பற்றி பேசுகிறார்கள் என்றால் அதுபற்றி எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் அல்லவா?

ஆனால்எங்கள்பற்றியபேச்சுக்கள்எங்களுக்கே சிதம்பர இரகசியமாக இருக்கின்றன.

# ஜெயலலிதா இன்று டில்லி பயணம்

## மன்மோகன், சோனியாவுடன் சந்திப்பு

முதல்வராகப் பொறுப்பேற்ற பின் முதல் முறையாக முதல்வர் ஜெயலலிதா இன்று புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளார். மாநில வளர்ச்சிக்கான நிதிகளைப் பெறுவதற்கும் மத்திய அரசுடன் இணக்கமானபோக்கை கடைப்பிடிப்பதற்கும் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் தலைவர் சோனியாவை ஜெயலலிதா நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இவர்களது சந்திப்பின் எதிரொலியாக தமிழக அரசியலில் கூட்டணி மாற்றத்திற்கான அரங்கேற்றம் நிகழும் என அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

கடந்த 16ஆம் திகதி முதல்வராக ஜெயலலிதா பதவியேற்றார். அவருக்குப் பிரதமர் மன்மோகன் சிங், சோனியா ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்தனர். டில்லியில் நடக்கும் தேநீர் விருந்தில் ஜெயலலிதாவை கலந்து கொள்ளும்படி சோனியா அழைப்பு விடுத்தார். முதல்வர் பதவியேற்றதும் சில நாட்களுக்குள் பிரதமரை முதல்வர் மரியாதை நிமித்தமாக சந்தித்திருக்க வேண்டும். ஆனால் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற நலத்திட்டங்களைச் செயல்படுத்தும் பணியில் ஜெயலலிதா ஈடுபட்டார். அதன்பின் ஆளுநர் உரை மீதான விவாதம் சட்டசபையில் தொடங்கியது.

அதைத் தொடர்ந்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதமும் நடந்ததால் அவரால் டில்லி செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. கடந்த 10ஆம் திகதி சட்டசபைக்கூட்டத் தொடர் முடிந்ததால் இன்று அரசு செயலர்கள் மற்றும் உயரதிகாரிகளுடன் டில்லி செல்ல முதல்வர் ஜெயலலிதா திட்டமிட்டுள்ளார்.

பிரதமருடனான சந்திப்புக்குப் பின் சோனியாவை மரியாதை நிமித்தமாக முதல்வர் சந்திக்கவும் வாய்ப்புள்ளது. இருபெண் தலைவர்களும் அரசியல் ரீதியாக மனம்விட்டு பேசி 10 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது என்பதால் தற்போதைய இருவரின் சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் எனக் கருதப்படுகிறது. குறிப்பாக அ.தி.மு.க. ஆட்சிக்கு ஆதரவாக புதிய ஆளுநரை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்த வாய்ப்புள்ளது.

டில்லியில் சோனியா, முதல்வர் சந்திப்பு நடக்குமா? அப்படியே இருவரும் சந்தித்துப் பேசினால் தமிழக அரசியலில் மாற்றம் ஏற்படுமா என்பது குறித்து பெயர் சொல்ல விரும்பாத கட்சி பிரமுகர் ஒருவர் கூறியதாவது,

பிரதமரைச் சந்திக்கும்போது கண்டிப்பாக சோனியாவையும் முதல்வர் சந்திக்க வாய்ப்புள்ளது. மத்திய அரசுடன் மாநில அரசு இணக்கமாக இருக்கவேண்டும் எனமுதல்வர் விரும்புகிறார். அதனால்தான் சட்டசபையில் இலங்கைத் தமிழர், கச்சதீவு விவகாரத்தில் மத்திய அரசையோ,காங்கிரசையோ அ.தி.மு.க குற்றம்சாட்டி பேசவில்லை. மத்திய அரசை வலியுறுத்திதான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க.தலைவரின் பிறந்தநாளுக்கு காங்கிரஸ் தலைவர்கள் வாழ்த்து சொல்லவில்லை ஆனால், முதல்வராக ஜெயலலிதா பதவி ஏற்றதும், சோனியா வாழ்த்து தெரிவித்தார். கூடா நட்பு கேடாய் முடியும் என தி.மு.க தலைவர் கூறியது காங்கிரசாரின் மனதை புண்படுத்தியுள்ளது.

தி.மு.க ஒரு மூழ்கும் கப்பல் என தெரிந்து கொண்டே, அதில் பயணம் செய்து காங்கிரசும் மூழ்கியுள்ளது. எனவே, தி.மு.க. கூட்டணியை விட்டு எப்போது வெளியேறுவோம் என காங்கிரஸ் தொண்டர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

சோனியா, முதல்வர் சந்திப்புக்கு பின் அ.தி.மு.க-காங் கிரஸ் கூட்டணி உருவாகுவதற்கு ஒரு அச்சாரமாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க.நீடிப்பது குறித்து விடுதலைச் சிறுத்தைகள் அதிருப்தி

காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க தொடர்ந்து நீடிப்பது குறித்து தி.மு.க கூட்டணியில் அங்கம் வகிக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சிடன் கூட்டணி தொடர்கிறது என தி.மு.கவின் சார்பில் வெளியான செய்தி தங்களுக்கு கசப்பாக இருப்பதாகவும் இம்முடிபை அக்கட்சி மறுபரிசீலனை செய்யவேண்டும் எனவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர், தொல்.திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், தமிழக சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க கூட்டணி ஏற்பட்டதாக கூறியுள்ளார்.

அத்துடன்தி.மு.கவுடனானநெருங்கிய உறவாலேயே கூட்டணியில், இணைந்து போட்டியிடும் சூழல் உருவான போதிலும் தி.மு.க மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளின் தோல்விக்கு காங்கிரஸ் கட்சிதான் முக்கிய காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர்க் குற்றவாளி என்றும் இலங்கை அரசாங்கத்தின் மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றில் தீர்மானம் நிறைவேற்றிய அ.தி.மு.க அரசை பாராட்டுகிறேன்.

அதேபோல கச்சதீவை திரும்ப பெறவேண்டும் என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் வரவேற்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழர்களுக்காக புனிதப்போர் நடத்துகிறோம்

## தா.பாண்டியன் தெரிவிப்பு

இலங்கைத் தமிழர்களுக்காக நாம் குரல் எழுப்ப வேண்டிய ஒரு கடமை வந்திருக்கிறது. அந்தக் கடமையைத் தான் இப்போது நாம் செய்து கொண்டிருக்கிறோம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைவர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1.76 இலட்சம் கோடியை கொள்ளையடித்து விட்டு அதற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கனிமொழிக்காக கவலைப்படும் கருணாநிதி இலங்கையில் 2009 மே 20 ஆம் திகதி முதல் இன்று வரையில் கம்பி வேலிக்குள் அடைபட்டு கிடக்கும் நம் தமிழர்களுக்காக ஒரு போதும் கவலைப்பட்டதில்லை.

எனவே இலங்கையில் வாழும் நம் சொந்தங்களை ஒரு பாவமும் தெரியாத அந்த பச்சிளம் குழந்தைகளை காப்பாற்றுவதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்துகிற புனித போரில் கட்சி பாகுபாடின்றி அனைவரும் பங்கேற்க வேண்டும் என அறைகூவல் விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# கனிமொழியின் பிணைமனு இன்று விசாரணை

ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் உள்ள கனிமொழி மற்றும் கலைஞர் டி.வி நிர்வாக இயக்குநர் சரத்குமார் ஆகியோர் தங்களை பிணையில் விடுவிக்க கோரி டில்லி உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதையடுத்து இருவரும் உச்ச நீதிமன்றில் மனுதாக்கல் செய்திருந்தனர். இந்த மனு மீதான விசாரணை இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## கொடுப்பவனாக வாழுங்கள்

கையை இறைவன் படைத்தது கொடுப்பதற்கே. நீ பட்டினியாய்க் கிடக்க நேர்ந்தாலும் உன்னிடத்திலுள்ள கடைசிப் பருக்கையையும் பிறருக்குக் கொடுத்துவிடும். அவ்வாறு பிறருக்கு கொடுப்பதாலேயே நீ பூரணமடைவாய். தெய்வமாகவும் ஆவாய்.

தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் புறத்தேயுள்ள எதற்கும் வசப்படமாட்டான். அதன்பின் அவனுக்கு அடிமைத்தனம் எதுவுமில்லை. அவன் மனம் விடுதலை பெற்று விட்டது. அத்தகைய நிலைமை அடைந்தவனே உலகத்தில் நன்றாக வாழக்கூடிய தகுதி பெற்றவனாவான்.

அன்பைக்கொடு,உதவியைக்கொடு,பணியைக்கொடு. இவ்வாறு உலகில் எப்போதும் கொடுப்பவனாக நிற்கவேண்டும். பதிலுக்கு ஒன்றையும் எதிர்பார்க்கக் கூடாது. இறைவன் நமக்குக் கொடுப்பது போன்று நமது ஈகைக் குணத்தால் நாமும் கொடுப்போம்.

தூய்மையான மனதைப் பெறுவதுடன் இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அவனைச் சார்ந்து நிற்க முனைவதுடன் நன்னெறியில் நிற்க வேண்டும்.

# ‘இலங்கையின் கொலைக்களம்’ ஒளிபரப்புவது எதற்காக?

40, 000 வரையான அப்பாவிப் பொது மக்கள் மீதான படுகொலைகள் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதை சனல் 4 தொலைக்காட்சியால் உருவாக்கப்பட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் காண்பிக்கப்பட்ட ‘இலங்கையின் கொலைக்களம்’ ஆவணப்படத்தில் உள்ள அனைத்து ஆதாரங்களும் எடுத்துரைக்கின்றன என சனல் 4 தொலைக் காட்சியின் செய்தி மற்றும் சமகால விவகாரங்களுக்கான பிரிவின் பொறுப்பாளர் டொறொதி வைர்னி தெரிவித்துள்ளார்.

இவ்வகையான கொடுமைகளை இழைத்தவர்கள் நீதியின் முன் நிறுத்துவதற்குரிய அனைத்துலக பொறிமுறை அவசியம் என்பதை வலியுறுத்தும் நோக்கில் அந்த ஆவணப்படம் சனல் 4 தொலைக்காட்சியில் அடுத்த வாரம் ஒளிபரப்பப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். ‘இலங்கையின் கொலைக்களம்’ ஆவணப்படம் சனல் 4 தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படுவது எதற்காக என அவர் அளித்துள்ள விளக்க குறிப்பின் முழுப் பகுதியையும் இங்கே தருகின்றோம்.

‘நிர்வாணமாக்கப்பட்ட நிலையில் பெண்களின் உடல்கள் வாகனத்தில் இழுத்துப் போடப்படுகின்றன. இழுத்துப் போடப்பட்ட ஒவ்வொரு பெண்களையும் இலங்கைப் படையினர் இழிவு படுத்தி, குதூகலித்துச் சிரிக்கின்றனர். கைகள் கட்டப்பட்டுள்ள நிலையில் கொல்லப்பட்டுக் காணப் படும் பெண்களின் உடல்களைப் பார்த்து இலங்கைப் படையினர் சிரிக்கும் காட்சிகளை ஏனைய படையினர் படம்பிடிக்கின்றனர். கொல்லப்படுவதற்கு முன்னர் அப் பெண்கள் இலங்கைப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக நம்பப் படுகின்றது.

செல்லிடத் தொலைபேசி மூலம் படம்பிடிக்கப்பட்ட மற்றுமோர் காட்சியில் ஒரு பெண் மண்டியிட்டு மன்றாடுவதும், அதேவேளை அவரை எப்படி கொல்ல வேண்டும் எனப் பணிக்கப்படுவதும் பதிவாகியுள்ளது. அடுத்த காட்சியில் அவரது மூளை வெளியில் தள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (14.06.2011) சனல் 4 இல் காண்பிக்கப்படவுள்ள ‘இலங்கையின் கொலைக்களம்’ ஆவணப்படத்தில் இடம் பெற்றுள்ள சில காட்சிகளே மேலே விபரிக்கப்பட்டுள்ளன. உடல் உறுப்புகளை அறுத்தல், படுகொலைகள், பெண்களை இழிவுபடுத்துதல் போன்ற காட்சிகளைப் பிரித்தானியத் தொலைக்காட்சியில் காண நேரிடுமென நான் ஒரு போதும் எண்ணியிருக்கவில்லை.

இந்த நிகழ்ச்சியைப் பார்க்குமாறு நான் உங்களை தூண்டவில்லை. அக்காட்சிகள் மிகவும் கொடூரமானவை. அந்தப் படங்கள் உங்கள் மனங்களில் பதிந்து நிற்கக்கூடியவை. சில வேளைகளில் பல ஆண்டுகளாக மனதில் பதிந்து நிற்கக்கூடியவை. எனது தலையிலிருந்து அவற்றை இறக்கிவைக்க என்னால் முடியவில்லை.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இரவு 11 மணிக்கு இந்த ஆவணப்



## 14ந் திகதி சனல் 4 வெளியிடவுள்ள இலங்கையின் ‘கொலைக்களம்’

படம் ஒளிபரப்பப்படவுள்ளது. கொடூரமான படங்கள் இறுதிப் பகுதியில் அதிகம் இடம்பெறுகின்றன. நள்ளிரவை அண்டிய நேரத்தில் ஒளிபரப்பப்படவுள்ளதால் சிறுவர்கள் இதைப் பார்ப்பது தடுக்கப்படுகின்றது.

ஆயினும், செய்திக் காட்சிகளில் கூட அச்சமூட்டத்தக்க காட்சிகளைப் பார்க்க முடியாத பல வளர்ந்தவர்களும் இந்தக் கொடூரத்தைப் பார்க்க மாட்டார்கள். நான் இதனை ஒரு போதும் பார்க்காமல் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றேன்.

மொத்தத்தில் நாங்கள் இதனை ஒளிபரப்பவேண்டிய தேவையில்லை. ஏனெனில் இலங்கையின் உள்நாட்டுப் போரின் போதும், போருக்குப் பின்னரும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களை அரசாங்கம் புரிந்திருப்பதற்கான வலிமையான ஆதாரங்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு ஏற்கெனவே தெரிவித்துள்ளது.

40,000 வரையான அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக நிபுணர்கள் குழு நம்புகின்றது. பாரிய அளவிலானதொரு போர்க்குற்ற விசாரணைக்கு நிபுணர்கள் குழு பரிந்துரைத்துள்ளது. ஆனால் எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை. என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கு ஊடகவியலாளர்களையோ, ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளையோ இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவில்லை. ஆனால் இலங்கை படைத்தரப்பினர் தமது நடவடிக்கைகளைச் செல்லிடத் தொலைபேசி மூலம் படம் பிடித்து பதிவு செய்துள்ளனர்.

இலங்கை படையினரால் செல்லிடத் தொலைபேசி மூலம் படம் பிடிக்கப்பட்ட காணொளிகளே மிக மோசமானவை. கைதிகளைக் கொடுமைப்படுத்துவதை அவர்கள் படம் பிடித்துள்ளனர். காணொளிகள் மற்றும் நூற்றுக் கணக்கான ஒளிப்படங்கள் உள்ளன. அவற்றில் குழிகளிலும், நீண்ட வரிசைகளிலும் கொல்லப் பட்டவர்களின் உடலங்கள் காணப்படுகின்றன. பலர் கட்டப் பட்ட நிலையிலும், பலர் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றனர்.

எறிகணை வீச்சிலோ அன்றி போர் நியமங்களுக்கு உட்பட்ட நடவடிக்கைகளிலோ கொல்லப் பட்ட உடலங்களாக அவை தெரியவில்லை. ஒரு சிறு குழு சிறுவர்களின் உடல்கள் குழியில் காணப் படுகின்றன. கைதிகள் உயிருடன் காணப்படுகின்றனர். சில கைதிகள் இம்சைப்படுத்தப்பட்டும், பின்னர் கொல்லப்பட்டும் காணப் படுகின்றனர்.

தமிழர்களால் எடுக்கப்பட்ட காணொளி பெரும் கவலை தருவதாக உள்ளது. அவற்றில் மருத்துவ மனைகள் மற்றும் இடம் பெயர்ந்தோர் திட்டமிடப் பட்டுத் தாக்கப்பட்டதற்கான வலுவான ஆதாரங்கள் உள்ளன.


போர்க் குற்றங்கள் மற்றும் போரின் பின்னரான படுகொலைகள் தொடர்பான காணொளிகள் போலியானவை என இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது. காணொளி தடய நிபுணர்கள் மற்றும் மருத்துவ வல்லுநர்களால் உறுதிப்படுத்தப்பட்டவற்றையும் இலங்கை அரசாங்கம் மறுத்து வருகின்றது. விடுதலைப் புலிகளே மக்களைக் கொன்றதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

விடுதலைப் புலிகளும் மக்களைக் கொன்றுள்ளார்கள். ஆனால் 40,000 பொது மக்களை அவர்கள் கொல்லவில்லை. வேறு சக்தியே இத்தனை ஆயிரம் மக்களைப் படுகொலை செய்தது. படுகொலைகள் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டமையை இங்குள்ள அனைத்து ஆதாரங்களும் வெளிப்படுத்துகின்றன.

இது குறித்து என்ன சிந்திப்பது என்பதை உங்களுக்கு நாங்கள் சொல்லவேண்டிய அவசியமில்லை. நீங்களே பார்த்து மதிப்பிட்டுக் கொள்ளுங்கள். இவ் வகையான கொடுமைகளை இழைத்தவர்கள் நீதியின் முன் நிறுத்துவதற்குரிய அனைத்துலக பொறிமுறை அவசியம் என இந்த ஆதாரங்கள் உங்களைச் சிந்திக்க வைக்கும் என சனல் 4 தொலைக் காட்சியின் செய்தி மற்றும் சமகால விவகாரங்களுக்கான பிரிவின் பொறுப்பாளர் டொரொதி வைர்னி தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணப்படம் கடந்த வாரம் ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் காண்பிக்கப்பட்ட போது ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியப் பிரதிநிதிகள் உட்படப் பலர் பார்வையிட்டார்கள்.

இந்நிலையில், இந்த ஆவணப் படம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனல் 4 தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும்போது சர்வதேசரீதியில் இராஜதந்திரிகள் பலரால் பார்க்கப்படும் என எதிர் பார்க்கப்படுகின்ற நிலையில் நாமும் வேற்றின மக்களுக்கு இந்த ஆவணப்படம் குறித்து தெரியப் படுத்தி அவர்களையும் பார்வையிடச் செய்க.



# ரோகித் சர்மா துணிச்சல் ஆட்டம்

# இந்திய அணிக்கு ஹட்ரிக் வெற்றி

## மேற்கிந்தியத்தீவுகள் சொந்த மண்ணில் தொடரையிழந்தது

(அன்டிக்குவா)

றோகித் சர்மாவின் தற்துணிவான ஆட்டத்தின் மூலம் இந்திய அணி ஹட்ரிக் வெற்றி பெற்று ஒருநாள் தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

சொந்த மண்ணில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சோகம் தொடர்கிறது. மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ஒரே ஒரு இருபது-20 போட்டி, 5 ஒருநாள், மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை விளையாடிவருகிறது.

இதில் ஒரேஒரு இருபது-20 போட்டியில் வெற்றிபெற்ற இந்திய அணி தொடர்ந்து நடைபெற்ற இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் வெற்றியைப் பெற்று தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந் நிலையில் மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் அன்டிக்குவாவில் நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 29.3 ஓவர்களில் 96 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்து தத்தளித்தது.

இந் நிலையில் இணைந்த பாயோ-ரசல் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

இதில் பயோ 73 பந்துகளில் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் இறுதி வரை அதிரடி ஆட்டம் வழங்கிய ரசல் அரைச்சதம் பெற மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 225 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரசல் ஆட்டமிழக்காமல் 64 பந்துகளில் (8 பவுண்டரிகள் 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 92 ஓட்டங்களையும் சிமன்ஸ் 45, சர்வான் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முனாப்பட்டேல், அமித்மிர்சா தலா 3 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 226 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 22.2 ஓவர்களில் 92 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 6 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் 7ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ரோகித்சர்மா-ஹர்பஜன் சிங் ஜோடி அபார ஆட்டத்தை வழங்கி இந்திய அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இதில் ஹர்பஜன் சிங் 64 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 41 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த பிரவின் குமாரும் அதிரடியாக ஆட இந்திய அணி 46.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 228 ஓட்டங்களை எடுத்து மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி



பெற்றது.

இதில் ரோகித் சர்மா ஆட்டமிழக்காமல் 91 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 86 ஓட்டங்களையும் முனாப்பட்டேல் 46 ஓட்டங்களையும் பிரவீண்குமார் ஆட்டமிழக்காமல் 15 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் உட்பட) 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் சமி, பிஷ்சோ தலா இரண்டு விக்கெட்டுக்களையும் ரசல், பொலாட் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இப் போட்டியில் சிறப்பாக ஜொலித்த மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ரசல் ஆட்டநாயகனாக தெரிவானார்.

# சிம்பாவேயில் போட்டிகளை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டம்

(கராச்சி)

பாகிஸ்தான் செல்ல இலங்கை அணி மறுத்துள்ளதால் அங்கு விளையாட வேண்டிய போட்டிகளை சிம்பாவேயில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.) திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது பயங்கரவாத தாக்குதல் நடந்தது.

இதில் உதவிப் பயிற்சியாளர் உட்பட ஏழு வீரர்கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்துக்குப்பின் அங்கு எந்த அணியும் போட்டிகளில் பங்கேற்கச் செல்ல மறுக்கின்றன.

இந் நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபை ஐ.சி.சி. அட்டவணைப்படி எதிர்வரும் ஒக்ரோபர்-நவம்பர் மாதங்களில் இலங்கை அணி பாகிஸ்தானில் மூன்று டெஸ்ட், ஒரேஒரு இருபது-20, 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க வேண்டும். ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக பாகிஸ்தான் செல்ல இலங்கை அணி மறுத்துள்ளது.

இந்தப் போட்டிகளை இலங்கையில் நடத்தலாம் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அதேபோல அடுத்த ஆண்டு இங்கிலாந்து அணி பாகிஸ்தானில் பங்கேற்க வேண்டிய போட்டிகளையும் இலங்கையில் நடத்தலாம் என்றும் தெரிவித்துள்ளன.

இது குறித்து பி.சி.பி. செய்தித் தொடர்பாளர் நதீம் சர்வார்க் கூறுகையில் இலங்கைக்கு எதிரான போட்டித் தொடரை நாங்கள் சிம்பாவையில் நடத்தலாம் என்று திட்டமிட்டுள்ளோம் ஏன் எனில் இங்கு குறைவான செலவுகளே ஏற்படும் என்பதால் ஓரளவுக்கு பி.சி.பிக்கு வருமானம் கிடைக்கும் என்றார்.

# இலங்கை பிரிமியர் லீக்கில் ஜொலிப்பதற்கு வல்தாரி தயார்



(மும்பை)

இலங்கை பிரிமியர் லீக் தொடரில் அசத்த காத்திருக்கிறார் இந்திய வீரர் வல்தாரி.

இந்தியாவில் நடந்த நான்காவது ஐ.பி.எல் தொடரில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்காக விளையாடினார் போல் வால்தாரி. அதிரடியாக துடுப்பெடுத்தாடிய இவர், 14 போட்டிகளில் 463 ஓட்டங்கள் குவித்தார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் எதிரான லீக் போட்டியில் 68 பந்துகளில் 120 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றிபெற செய்தார்.

ஐ.பி.எல்.தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வீரருக்கான விருதினையும் காரையும் பரிசாக பெற்றார்.

காயம் காரண்மாக மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் இவரால் இடம்பெற முடியவில்லை. இது குறித்து வல்தாரி கூறியதாவது,

ஏற்கெனவே என்னிடம் கார் உள்ளது. ஆனால் ஐ.பி.எல்.தொடரில் சிறப்பாக செயல்பட்டதற்காக கிடைத்த கார் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

இம்முறை நன்றாக செயல்பட முடியும் என்ற நம்பிக்கை, தொடர் ஆரம்பமாகும் முன்பே இருந்தது.

போட்டிகளின் போது ஒரு முனையில் நானும் மறுமுனையில் பஞ்சாப் அணித்தலைவர் கில்கிறிஸ்டும் இருப்பார். அனுபவ வீரரான இவர், துடுப்பாட்டம் குறித்து நிறைய ஆலோசனைகள் வழங்கினார்.

அதிரடி ஆட்டத்தை கொடுத்த, அவர் என்னுடைய ஹீரோவாகத் திகழ்ந்தார். சக ஜமாக பழகக்கூடியவர். இலங்கையில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள பிரிமியர் லீக் தொடரில் விளையாட உள்ளேன்.

தற்போதைய ஐ.பி.எல்.தொடரில் செயல்பட்டதை போல் சிறப்பாக செயல்பட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. கிரிக்கெட் மூலம் என்னுடைய வாழ்க்கை தரம் மாறி உள்ளது.

மக்கள் எனக்கு அங்கீகாரம் அளித்துள்ளனர். கிரிக்கெட்டில் மிகப்பெரிய இடத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு வல்தாரி கூறினார்.

# பற்றீசியன்ஸ் அணி காலிறுதிக்குள் நுழைவு

(யாழ்ப்பாணம்)

ஓல்ட் கோல்ஸ் அணியை 127 ஓட்டங்களால் வீழ்த்திய பற்றீசியன் அணி ரட்ணசிங்க வெற்றிக்கிண்ண கிரிக்கெட் தொடரில் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 8 ஆவது ஆண்டாகநடத்திவரும் 50 ஓவர்களைக் கொண்ட அழைக்கப்பட்ட கழக அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் ஆறாவது போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பற்றீசியன் அணி ஓல்ட்கோல்ஸ் அணியைச் சந்தித்தது. இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 44.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 240 ஓட்டங்களை பெற்றது.

இதில் ரியூடர் 19, சயிந்திரன் 52, பத்மமுரளி 58, எரிக் 37 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் என்.திலீபன், ஜோயல் செகான் தலா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 241 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு களமிறங்கிய ஒல்ட் கோல்ஸ் அணி 24.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் 127 ஓட்டங்களால் வெற்றி பெற்ற பற்றீசியன் அணி காலிறுதிக்கு முன்னேறியது.


துடுப்பாட்டத்தில் ஜோயல் செகான் 51, சீராளன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். நோபேட் 5 விக்கெட்டுக்களையும் முரளி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் வெற்றிபெற்ற பற்றீசியன் அணி எதிர்வரும் 18ஆம் திகதி சிறிகாமாட்சி விளையாட்டுக்கழக அணியுடன் மோதவுள்ளது.

# சிவ்சங்கர் மேனனின் இரட்டை முகம்

# தமிழர் படுகொலையை புதைக்கும் வடிவம்

## சீமான் சீற்றம் - கண்டனம் காட்டம்



**(சென்னை)—**

**இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு, ஜனாதிபதி மகிந்தவை சந்தித்துப் பேசிய பிறகு இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்பில் இந்திய இதழாளர்களுக்கு அளித்த பேட்டியில், தமிழர் பிரச்சினை குறித்த அணுகுமுறையில், இந்திய மத்திய அரசின் போக்கில் உள்ள முரண்பாடுகள் குறித்து சீமான் சுட்டிக்காட்டியுள்ளார்.**

நாம் தமிழர் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கை சென்ற இந்திய உயர்மட்டக் குழு இலங்கைப் பிரச்சினைக்கு தமிழர்களுடன் சேர்ந்து ஓர் அரசியல் ஏற்பாட்டை உருவாக்கவேண்டும். அதனை உடனடியாக விரைவாகச் செய்யவேண்டும் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளோம் என்று கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று (நேற்று) காலை வெளியான ஆங்கில, தமிழ் நாளிதழ்கள் அனைத்திலும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு ஜனாதிபதி மகிந்தவிடம் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் தலைமையிலான குழு வலியுறுத்தியது என்று செய்திகளும் வந்துள்ளன.

ஆனால் இலங்கையிலிருந்து வெளியாகும் நாளிதழ்களிலும் இணையத்தளங்களிலும் வெளியான செய்திகள் வேறுவிதமாக உள்ளன.

தமிழர் பிரச்சினைக்கு தங்களுக்கு உகந்த ஒரு அரசியல் தீர்வைக்காணவேண்டியது இலங்கை அரசின் பொறுப்பு. இந்த விவகாரத்தில் இந்தியா எந்தவிதத்திலும் தலையிடாது என்று சிவ்சங்கர் மேனன் கூறியதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழர்கள் பிரச்சினைக்கு வேகமாகத் தீர்வு வேண்டும் என்று நாங்கள் விரும்பினாலும் தங்களுக்கு ஓர் உகந்த தீர்வை இலங்கை அரசுதான் உருவாக்கவேண்டும் என்றும் சிவ்சங்கர் மேனன் விளக்கியுள்ளார் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்பது இலங்கை அரசு தனக்கு உகந்த வகையில் முடிபெடுக்கக் கூடியது என்று இந்திய அரசு கருதுமானால் அப் பிரச்சினையில் எந்த விதத்திலும் இந்தியா தலையிடாது என்பதுதான் அதன் நிலையானால், பிறகு ஒரு அரசியல் ஏற்பாட்டை உடனடியாக உருவாக்கவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தியுள்ளோம் என்று கூறுவதன் பொருள் என்ன?

சிவ்சங்கர் மேனன் வார்த்தைகளில் உண்மையான, நீடித்த அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற அக்கறை பிரதிபலிக்கவில்லையே.

அதுமட்டுமல்ல, இலங்கை நாட்டின் உச்ச நீதிமன்றத்தால் அரசமைப்பிற்கு முரணானது என்று தூக்கி எறியப்பட்ட 13-வது திருத்தம் பற்றி சிவ்சங்கர் மேனன் பேசியுள்ளார்.

13-வது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் ஒரு தீர்வை தமிழர்களுக்குத் தரவேண்டும் என்று வலியுறுத்தினீர்களா? என்ற வினாவிற்கு 13-வது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் தீர்வை உருவாக்குவதாக இலங்கை அரசே கூறியுள்ளது என்று கூறுகிறார்.

இது இல்லாத ஊருக்கு வழிகாட்டும் அயோக்கியத்தனம் அல்லவா?

ஈழத் தமிழர் அரசியலுரிமைப் போராட்டத்திற்கு இந்தியா ஒரு தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்று கோரும் இலங்கைத் தமிழர் கட்சிகள், அதன் இரட்டை முகத்தை சிவ்சங்கர் மேனனின் வார்த்தைகளிலிருந்து புரிந்து கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்ல, தமிழக சட்டசபைப் பேரவையில் இலங்கை அரசிற்கு எதிராக போர்க்குற்றம், பொருளாதாரத் தடை ஆகியன குறித்து மகிந்தவுடன் விவாதிக்கவில்லை என்றும் தங்களைப் பொறுத்தவரை இந்தியாவில் மத்திய அரசோடு மட்டுமே உறவுகொண்டுள்ளதாகவும், இலங்கை அரசு கூறியதாக சிவ்சங்கர் மேனன் செய்தியாளர்களிடம் கூறியிருந்தார்.

ஆனால் இன்று (நேற்று) காலை வெளியான ஆங்கில நாளிதழில் அதன் கொழும்புப் பேச்சாளர் விடுத்துள்ள செய்தியில் தமிழக சட்டபேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மாணங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. அதன் சட்ட ரீதியான அடிப்படை குறித்து இலங்கை அரசு கேள்வி எழுப்பியது என்றும் ஆனால் அதற்கு இந்தியக் குழு என்ன பதில் தந்தது என்பதை சிவ்சங்கர் மேனன் வெளியிடவில்லை என்றும் கூறியுள்ளார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இலங்கைப் போர் குறித்து ஐ.நா. நிபுணர் குழு அளித்த அறிக்கையின் மீது இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்று கேட்டதற்கு ஐ.நா. மனிதவு ரிமை மன்றத்தில் எந்தவொரு நாட்டையும் தனிமைப்படுத்தி கண்டனத்திற்கு உட்படுத்த இந்தியா விரும்பவில்லை என்று பதிலளித்துள்ளார்.

இது மனிதவுரிமை மன்றத்தில் இலங்கை அரசை இந்தியா காப்பாற்றும் என்ற நேரடியான பதிலாகும்.

மேலும் இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் 40 ஆயிரம் பேர் வரை அப்பாவிப் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. அமைப்புக்களும் மனிதவுரிமைக் குழுக்களும் குற்றம் சாட்டுகின்றன.

இது குறித்து என்ன கூறுகிறீர்கள் என்ற வினாவிற்கு, அப்படிப்பட்ட தகவல்களில் உண்மை உள்ளதா? என்பதை கேள்விக்கு உட்படுத்தலாம் என்று சிவ்சங்கர் மேனன் கூறியுள்ளார்.

முள்ளிவாய்க்காலிலும் வட்டுவாகலிலும் நடந்த போரில் 10 ஆயிரம் முதல் 40 ஆயிரம்பேர் வரை கொல்லப்பட்டிருப்பார்கள் என்று ஐ.நாவின் கொழும்புத் தூதரகப் பேச்சாளராகவிருந்த கார்டன் வீஸ் போன்ற நேர்மையான அதிகாரிகள் கூறியிருந்தனர்.

பல்வேறு ஆதாரங்களை ஆராய்ந்த ஐ.நா நிபுணர் குழு பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறியுள்ளது.

ஆனால் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அப்படிப்பட்ட தகவல்கள் கேள்விக்கு உட்படுத்தக் கூடியவை என்று கூறியதிலிருந்து தமிழினப் படுகொலை பற்றிய உண்மையை இந்தியா புதைக்க முயற்சிப்பதும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அது இலங்கை அரசின் பக்கமே நிற்கும் என்பதையும் தெளிவாக்கியுள்ளது.

தன்னைச் சந்தித்துப் பேசிவிட்டு கொழும்பு சென்ற சிவசங்கர் மேனன் எப்படிப்பட்ட நபர் என்பதை அவர் வெளிப்படுத்திய வார்த்தைகளிலிருந்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் புரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டதற்கு உடந்தையான இந்திய அதிகாரி சிவ்சங்கர் மேனன் என்பதனையும், ஈழத் தமிழர்கள் அரசியல் சம உரிமை பெற எந்தவிதத்திலும் இந்திய மத்திய அரசு உதவாது என்பதையும், தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முன்னெடுக்க மத்திய அரசு ஒருபோதும் முன்வராது என்பதை தமிழக முதல்வரும் தமிழர்களும் புரிந்துகொள்ளவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

---

## கொக்குவிலி...

தைக் கண்டு கோபமடைந்து தொலைக்காட்சியை நிறுத்தும் பொருட்டு தொலைக்காட்சியின் மின்னிணைப்பை கழற்ற முற்பட்டுள்ளார்.

இதன்போது ஈரத்துடன் நின்ற அவரை மின்சாரம் தாக்க அவர் அந்த இடத்திலேயே விழுந்தார்.

சம்பவத்தை .அடுத்து உடனடியாக அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதும் அங்கு அவரின் உயிர் பிரிந்திருந்தது.

யாழ்.மாவட்ட பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

பிரேத பரிசோதனையின் பின் நேற்றிரவு 9.30 மணியளவில் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்த தயாமோகன் நல்லூர் பிரிவின் பொது சுகாதாரப் பரிசோதகராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

---

## இலங்கை விவ...

கட்சிக்கும் திமுகவுக்கும் இடையிலான 7 வருடகால உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள சூழலில் இச் சந்திப்பு இடம்பெறுகின்றது.

தமிழக சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அதிமுக வென்றவுடன் அவருக்கு காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி வாழ்த்துத் தெரிவித்தார். அதனால் இவ்விரு கட்சிகளும் மீண்டும் நெருக்கமாகலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் இம்முறை தனது டில்லி விஜயத்தின்போது சோனியா காந்தியை ஜெயலலிதா சந்திப்பாரா என்பது தெரியவில்லை. (ந-5)

---

## ஆபத்திலிருந்து...

பட்டால் ரஷ்யா ஆதரவு தரவேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொள்ளவுள்ளார்.

அதேவேளை சென் பீற்றர்ஸ் பேர்க்கில் (லெனின் கிராட்) நடைபெறவுள்ள அனைத்துலகப் பொருளாதார மன்றத்தின் கூட்டத்தில் பங்கேற்கவுள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேச மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் சீன அதிபர் ஹூ ஜின்டாவோவும் கலந்துகொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

---

## கொடு என்...

13-வது திருத்தச் சட்டமூலத்திற்கு அமைவாக இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு இந்திய மத்திய அரசு விடுத்த வலியுறுத்தலை, கொழும்பிற்கு வந்திருந்த இந்திய உயர்மட்டக் குழு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தது.

எனினும் இந்தியாவின் வலியுறுத்தலுக்கு இணங்க மறுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டால் இலங்கை- இந்திய இராஜதந்திர உறவில் மோதல்கள் ஏற்படலாம் என கொழும்புத் தகவல்களை ஆதாரம் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு இலங்கைக்கு ஆறு மாத காலக்கெடுவை இந்தியா விதித்திருந்தமை தெரிந்ததே. (ந-5)

---

## வற்றாப்ப...

மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் மீள் குடியேற்றம் இடம்பெற்றிருக்காதபோது முதலில் வற்றாப்பளைக் கிராமத்திலேயே மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆலயத்திற்குச் சென்ற இராணுவத்தினர் எதிர்கொண்ட நெருக்கடிகளை அடுத்தே மீள் குடியேற்றம் துரிதப்படுத்தப்பட்டதாக இராணுவத்தினர் ஆலய நிர்வாகத்தினரிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

---

## புலிகளின்...

சவேந்திர சில்வா எழுதியுள்ள இலங்கை - 2600 வருடங்களின் அடையாளம் என்ற புத்தகத்தின் வெளியீட்டு வைபவம் கண்டி தலதா மாளிகையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டில் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்ததைப் போன்றே வெளிநாடுகளில் இயங்கும் அவர்களின் வலைப்பின்னலை அழிப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

பௌத்த மதத்தின் போதனைகளின் பிரகாரம் செயற்பட்டு சர்வதேச ரீதியில் இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்களையும் வெற்றிகொள்ளமுடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திடம் உண்டு என்றும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.